"எனைத்தானு நல்லவை கேட்க அனைத்தானும், ஆன்ற பெருமை தரும்"

THE SAIVA PRAKASA PRESS

# இந்துசாதனம்

(SUPPLEMENT TO THE HINDU ORGAN.)

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"என் கடன் பணிசெய்து கிடப்பதே"

"சீர்பூத்த கருவிநூ லுணர்ச்சி தேக்கச்
செம்பூத்த சுமாக மக்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருளக லகப்
பரம்பூத்த சைவநெறி பாரோர் தாங்கப்,
போர்பூத்த வெளனத்த இனிது துங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானார் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றேத்து
மதம்பூத்த விநாயகன்றன் வணக்கிவாழ்வாம்"

"வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லாம ரனாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே."

புத்தகம்—சஎ } யாழ்ப்பாணம்:— யுவஞு ஆனிமீ உஎஉ ( 1935 ஜூலை 11 வியாழக்கிழமை. ) { இலக்கம்—உசு



## கந்தரலங்காரம்.

காவிக் கமலக் கழலுடன் சேர்த்தெனைக் காத்தருளாய்
தூவிக் குலமயில் வாகன னேதுணை யேதுமின்றித்
தாவிப் படரக் கொழுகொம் பிலாத தனிக்கொடிபோற்
பாவித் தனிமனந் தள்ளாடி வாடிப் பதைக்கின்றதே.

இ—ள்: தூவிக் குலமயில் வாகனனே - இறகின் செறிவையுடைய மயிலினை வாகனமாகக் கொண்டவரே; தாவிப்படரக் கொழுகொம்பு இலாத தனிக்கொடிபோல்- பற்றிப் படர்வதற்குக் கொழுகொம்பு இல்லாத தனித்த கொடியைப்போல; பாவித் தனிமனம் - பாவவழியிற் செல்லும் தனித்த என் உள்ளமானது; துணை ஏதும் இன்றி - துணை சிறிதும் இல்லாமல்; தள்ளாடி வாடிப் பதைக்கின்றது - அசைந்து சோர்ந்து துடிக்கின்றது; காவிக் கமலக் கழலுடன் சேர்த்து எனைக் காத்து அருள் ளாய் - (ஆதலால்) தேவரீருடைய நீலோற்பலமணிந்த செந்தாமரை மலரை நிகர்த்த திருவடிகளோடு சேர்த்துத் தமியேனைக் காத்தருள்க எ—று

கொழுகொம்பு - செடிகள் பற்றிப் படருதற்பொருட்டு நாட்டப்படும் கொம்பு; காவி, கமலம் ஆகு பெயர்கள், தள்ளாடல் இலக்கணை, இது திருவடிக்கிரங்கியவாறும்.

மயில்வாகனக் கடவுளே, பற்றுக்கோடற்ற தமியேனுக்குத் தேவரீருடைய திருவடிகளைப் பற்றுக் கோடாகத் தந்தருள்க என்றபடி. (கூகூ.)

### குளிக்கச் சென்றவரின் மரணம்.

மடுவில் வாலிபனுக்கு நேர்ந்த கதி.

கத்தோலிக்கரின் திருப்பதியாகிய மாதா மடுவில் இப்போது கோவிலைகள் நடக்கின்றன. சென்ற ஞாயிற்றுக்கிழமை யன்று அங்கு சென்றவர்களில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வாலிபன் ஒருவன் ஆங்குள்ள ஆற்றிற் குளிக்கும்போது, சேற்றிற் புதைந்து அமிழ்ந்திமாண்டான். சில மணித்தியால நேரம் சென்றபின்னரே அவனது பிரேதம் கண்டுபிடிக்கப்பட்டது.

### ஓர் விநோதப் பரிசு.

உலகிலுள்ள பரிசுகளிலெல்லாம் விநோதமான ஓர் பரிசு கனடாதேச ரொறன்ரோ நகரில் சான்ஸ்மில்லர் என்பவரால் 1936-ம் வருடத்தில் அளிக்கப்படும். அவர் 1926 முதல் 1936 வரையில் அங்கு எந்தத் தாய் அதிகமான இரட்டைக் குழந்தைகளைப் பெற்று உயிருடன் வைத்திருக்கிருளோ அவளுக்கு லட்சம் டவுண் பரிசளிப்பதாகத் தெரிவித்திருந்தார். இந்தப் போட்டிப் பரிசில் மத்தியு கென்னி என்பவனின் மனைவிக்கு வெற்றி கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இவள் இதுவரையில் 18 குழந்தைகளைப் பிரசவித்திருக்கிருள். அவைகளில் 6 இரட்டைப் பிள்ளைகள். அவளது பிள்ளைகளில் இப்பொழுது 9 பிள்ளைகளே உயிருடன் இருக்கின்றார்கள். மேலும் அடுத்த மார்கழி மாதத்தில் தனக்கு இரட்டைக் குழந்தைகள் பிறக்குமென அவள் எதிர்பார்த்து அக்குழந்தைகளுக்குப் போடுவதற்காக இரு சிறிய தங்கச் சங்கிலிகள் செய்துவருகிருள். தவிர அப்பரிசைப் பெற வேண்டுமென்று அவள் கடைசியாகப் பெற்ற குழந்தை இறந்துவிடாமல் மிகவும் கவனம் செலுத்தி வருகிருளாம். இவளுக்கு அடுத்தபடியாக இப்பரிசுக்கு அப்புரூஸ் ஹேரிஸன் போட்டிபோடுகிருளாம். இவளுக்குக் குறிப்பிட்ட காலத்தில் பிறந்த குழந்தைகள் ஒன்பது இருக்கின்றன. இவளுக்குப் பரிசைப்பற்றிய கவலை இல்லை. இவளும் சமீபத்தில் ஓர் குழந்தையைப்பெறுவாள் என்று தெரிவருகிறது,

### "ஆவாரை யாரே அழிப்பார்?"

—(∗)—

குவெற்ருவில் அதிசய சம்பவம்.

26 நாட்களின் பின்னும் உயிருடன் இருந்த பசு.

பிரிட்டிஷ் பலுக்கிஸ்தானத்தைச் சேர்ந்த குவெற்ருவில் நிகழ்ந்த பூகம்பத்தினுல் பல்லாயிரக்கணக்கான கட்டிடங்கள் கீழ்விழ்ந்து நாசமாயின. அவற்றின்கீழ் நசுக்குண்டு உயிர்துறந்தோர் பல்லாயிரம்பேராவர். நசுக்குண்டு கிடக்கும் பிணங்களை மீட்கும்வேலை அங்கே துரிதமாக நடைபெறுகின்றது. அப்படி மீட்டுக்கொண்டு போகும்போது கட்டிடங்களின்கீழ் ஓர் பசு அப்படியே உயிருடன் இருப்பதைக்கண்டு இழுத்து எடுத்தார்கள்! பூகம்பம் நேர்ந்து 26 நாட்களின் பின்னரும் இப் பசு உணவு, தண்ணீர் ஒன்றும் இன்றி உயிருடன் இருந்ததையிட்டுப் பலர் ஆச்சரியப்படுகின்றனர்.

### குவெற்ருப்பூகம்ப நிவாரணத்திற்கு 1 லட்சம் ரூபா.

கொண்டால் மகாராஜா, குவெற்ரு பூகம்பவிபத்து நிவாரணத்தின் பொருட்டு 1 லட்சம் ரூபா உதவியிருக்கின்ருர். பீகார் விபத்துக்கும் இவர் முன்னர் 1 லட்சம் ரூபா கொடுத்தவர்.

### அரசாங்கசபைத் தேர்தல்.

தற்போது அரசாங்கசபையிற் பருத்தித் துறைப்பகுதிப் பிரதிநிதியாயுள்ள ஸ்ரீ G. G. பொன்னம்பலம் அவர்கள் அடுத்த பொதுத் தேர்தலில் மன்னுர்ப் பகுதிக்கு அபேட்சகராக நிற்பர் என்று தெரிகிறது.

### பிறக்ரர்மாரின் ஆலோசனை.

நீதிவிசாரணைச்சபைக்கு முன்னுல் மிஸ்டர் J K. ஆர்ணல்டின் தலைமையில் ஓர்பிறக்ரர் கோஷ்டிசாட்சியம் அளித்தது. சிவில் சேர்விஸ் பரீட்சையிற் சித்தியெய்திய ஒருவரை நீதிபதியாக நியமிக்கவேண்டுமானுல் அவர் ஓர் நீதிபதியின்கீழ் 2 அல்லது 3 வருஷகாலத்திற் பயிற்சிபெறுதல் வேண்டுமென்றும், டிஸ்திறிக் நீதிபதிகள் இருவர் யாழ்ப்பாணத்திற்கு இருத்தல்வேண்டும் என்றும் மிஸ்டர் ஆர்ணல்ட் கூறினர்.

### யாழ்ப்பாணம் ஐக்கியபண்டகசாலை.

ஷை பண்டகசாலையின் அங்கத்தவர்களது மூன்ருவது வருஷாந்தக்கூட்டம் ஜூலை மாதம் 20-ம் தேதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் 'நீகல்' மண்டபத்திற் கூடும் என ஷை பண்டகசாலைச் செயலாளர் தெரிவிக்கின்ருர்.

### மரணமடையும் நாள்,

முன்னதாகக்கூறும் மெஷின்.

நீங்கள் இன்னும் எத்தனைநாள்வரை உயிருடன் இருப்பீர்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா? இதைப்பற்ற ஒரு ஜோஷியனையோ, ஆருடக்காரனையோ தேடிக்கொண்டு செல்லவேண்டாம். இதற்கென ஜெர்மன் விஞ்ஞானியாகிய டக்டர் பெலிக்ஸ் பெர்ன்ஸ்டீன் என்பவர் ஒரு புதிய மெஷினைக் கண்டுபிடித்திருக்கிருர். இந்த மெஷின் மனிதக் கண்களின் விபரங்களை யெல்லாம் தெளிவுபடுத்திக் காட்டிவிடுவதுடன், வெள்ளைவிழியையும் அளவெடுத்துவிடுமாம். இந்த விபரங்களைக்கொண்டு ஒரு மனிதன் இன்னம் எத்தனைக்காலம் உயிர்வாழுதல் கூடுமென்றும், என்னென்ன நோய்கள் அவனுடலில் இருக்கின்றனவென்றும், எந்நோய்களுமரணமடைவானென்றும் தெளிவாகக் கூறிவிடுதல் சாலுமாம்.

## "கறுத்தவர்களை எப்போதும் வென்றேம்."

வெள்ளைக்கார முசோலினியின் வீம்பு!
போர் புரிந்தே தீருவதாம்.

பீரங்கிக்கு மேல் நின்று பிரசங்கம்

—— § ——

### விவசாயிகளுக்கு 300 கோடி ரூபா.

அமெரிக்க விவசாயக்குடிகள் சொந்தமாக நிலங்களும் வீடுகளும் வாங்குவதற்கு உதவிசெய்யும்பொருட்டு ஒரு விவசாய உதவி இலாகா ஏற்படுத்துவது சட்டமாக நிறைவேறிவிட்டது இது வகைக்காக விவசாயிகளுக்குக் கடன்பத்திரம் மூலம் 300 கோடி ரூபாய்வரை கடனுக உதவப்படும்.

### தங்கம் போகும் போக்கு.

ஜூன் மாதம் 29-ம் தேதியுடன் முடிந்த வாரத்தில் 8,89862 ரூபாய் பெறுமதியான தங்கக்கட்டி பம்பாயிலிருந்து அனுப்பப்பட்டது. இங்கிலாந்து தங்கநாணய மதிப்பைக் கைவிட்ட நாட்டொட்டக்கச் சென்ற 29-6-35 வரை 230 4765027 ரூபா பெறுமதியான தங்கம் அந்நியநாடுகளுக்கு ஏற்றுமதிசெய்யப்பட்டிருக்கிறது.

சென்ற 6-ம் தேதி இத்தலியச் சர்வாதிகாரியான முசோலினி ஓர் யுத்த முழக்கம் செய்தார்.

"நாங்கள் யுத்தஞ் செய்வதென்று தீர்மானித்து விட்டோம். இனிப் புறங்காட்ட மாட்டோம்.

"கறுப்பர்களை வெள்ளையராகிய இத்தலியர் எப்போதும் தோற்கடித்துக் கொண்டே வந்திருக்கிறோம். எனவே இப்போதும் இக்கறுப்பர்களை முறியடிப்போம்.

"எமது இற்றலி மாதாவின் பல்லாயிரக்கணக்கான வீரப்புதல்வர்கள் ஆபிரிக்காவிற்குப் புறப்பட்டு விட்டனர். அவர்கள் ஜெயகோஷத்துடன் மீண்டுவரவேண்டுமென்றே இங்குள்ளார் எல்லாரும் பிரார்த்திக்கின்றனர். வெற்றிபவர்களுக்குண்டாகட்டும். ஜெய! ஜெய!!'

என்ருர் முசோலினி!

# நமது தாய்நாடு

[திரு. சி. ஆ. கணபதிப்பிள்ளை காரைநகர்]

(முற்றொடர்)

அநுராதபுரம் ஒரு காலத்தில் இலங்கையின் தலைப் பட்டினம். கடைகளுங் கடைத் தெருக்களும், மாட மாளிகை கூட கோபுரங்களும், அரண்மனையும், நீதிமன்றங்களும், ஆழ்ந்தகேணியு மெக்கிரக்கிணறுந் தண்பூங்காவும், வெண்சுதைக் குன்றிறுடு வேண்டுவபிறவும் ஈகித்துபொலிந்து விளங்கிய இடம். அப்போது அரசியலுறையிடம். இன்று எல்லாம் பாழடைந்துவிட்டன. வன்னியர் ஆட்சிபுரிந்த வன்னிநாடும் அரசியற் சூழ்ச்சிகளால் இருந்தவிடந் தெரியாது மறைந்த மற்றேனைய பட்டினங்கள், ஊர்கள், நாடுகளுக்கு மாறுபட்டதல்லவே!

"எழுநிலை மாடங் கால்சாய்ந் துக்குக்
கழுதை மேய்பா ழாகினு மாகும்".

என்ற வெற்றிவேற்கை ஆசிரியர் கூற்றிற்கு நம் வன்னி நாடும் இலக்காயிருக்கிறது. அறுபது நூறாயிரம் மக்கள் வாழ்ந்த வன்னி நாட்டில் எத்தனையோ குளங்களை வெட்டியுள்ளார்கள். காடுவெட்டி நாடாக்குதலும், குளந்தொட்டு வளம் பெருக்குதலுமவர்கள் தொழில். தற்காலம் மின்னேரியாவென்ற இடத்தை எங்களுக்குத் தெரியும் அந்த இடத்திற்கு "முன்னேரி" என்பது அக்காலப் பெயர். முன்+ஏரி என்பது முன்னுக்கு இருந்த குளம் என்னும் பொருளைத் தருகின்றது. அந்த இடத்தில் வன்னியர் காலத்திலோர் பெருங் குளமிருந்தது. மகாவலிகங்கையிலிருந்து தண்ணீர் பறிக்குங் கட்டி இப்பழைய பெருங் குளத்தை (முன்னேரியை) நிரப்பினார்கள். அதுபோனறே இன்றைக்கு மின்னேரியாக் குளத்தையுஞ் செய்திருக்கிறார்கள்.

இக் குளத்திலிருந்து கால்வாய்கள் வெட்டிச் சென்று பற்றேனைய குளங்களையும் (வன்னி நாட்டிலுள்ள குளங்கள்) நிரப்பியுள்ளார்கள். இக் குளங்கள் மூலமாகவும், கால்வாய்கள் மூலமாகவும் மரக்கலங்கள் உள்நாடுகளிலுள்ள விளை பொருள்களை ஏற்றி மகாவலிகங்கை மூலமாகத் திரிகோணமலை சென்று அவ்விடத்திலிருந்தே காவிரிப் பூம்பட்டினம் முதலாய துறைமுகங்கட்குக் கடல் மார்க்கம் போனதாக அறியக்கிடக்கின்றது.

இத்தகைய கால்வாய்கள் மூலமாகக் கொண்டுவரப் பெற்ற கங்கை நீரானது குளங்கள் பலவற்றையும் நிரப்பிய பின்னர் குளக்கட்டுக்கு மேலாக வழிந்தோடத் தலைப்பட்டது கண்டு, அவ்வன்னியர்கள் பின்னு மக்கால்வாயை வடக்கு நோக்கி வெட்டிச் சென்றனர். அப்படியாக வெட்டப்பெற்ற கால்வாயையே வவனியவிளாங் குளத்தி லூற்றெடுத்தோடும் கனகராயன் ஆறென இன்று வழங்கப் பெறுகின்றது. கனகராயன் என்னு மரசன் தான் இக் கால்வாயை வெட்டுவித்தானென் றென்பது இன்னுமறிய வேண்டியிருக்கிறது.

கனகராயன் யாழ்ப்பாணக் குடா நாட்டிலிருந்தவனென்றும், இக் குடாநாட்டிலிருந்த குளங்களையும் மகாவலி கங்கையின் நீரால் நிரப்புவான் வேண்டியே வவனியவிளாங் குளத்திலிருந்து வடக்கு நோக்கித் தற்காலம் கனகராயன் ஆறென வழங்கப்பெறுங் கால்வாயை வெட்டுவித்தவனென்றும், அது முற்றுப்பெறும் முன்னர் அவருக்கு ஏதோ இடையூறு சம்பவித்திருக்கவேண்டு மென்றும், வெட்டிய கால்வாய் மூலமாக ஓடிவந்த நீரானது யானையிறவுக் கடலுள் வீழ்ந்து அக்காலம் யாழ்ப்பாணக் குடாநாட்டையும் வன்னி நாட்டையு மிணைத்துக் கொண்டிருந்த சிறு பூசந்தியைக் கரைத்துக் கடலாக்கிவிட்டதெனவும், 1784-ம் ஆண்டில் நம் நாடு மழையில்லாது வறுமையுற்றதுகண்ட ஒல்லாந்த (Dutch) அரசினர் இக் கால்வாயைத் தொடர்ந்து வெட்டி நம் நாட்டை நீர்ப்பாய்ச்ச முயற்சித்தனரென்றும், அம்முயற்சி அரசாங்கத்தை யடுத்த கலகங்கள் காரணமாக முற்றுப்பெறவில்லையென்றுங் கூறுவர்.

சென்ற ஐம்பதுக்கு மேற்பட்ட ஆண்டுகளாக நம் நாட்டிளைஞர்கள் ஆங்கிலக் கல்வி பயின்று அதில் தேர்ச்சியுற்ற பின்னர் திரைகடலோடியுந் திரவியந்தேடு என்ற ஔவையார் வாக்குக்கிணங்கக் கடல்கடந்து சென்று பலராய் நாடடைந்தனர். அங்ஙனமடைந்தவருட் பெரும்பாலார் அந்நாட்டரசாங்கத்தில் வேலைக்கமர்ந்தனர். சிறுதொகையினர் தோட்டங்களிலும் கடை முதலியவற்றிலும் வேலைக்கமர்ந்தனர். எஞ்சியவர்கள் (அதாவது விரல்விட்டெண்ணக்கூடியவர்கள்) பல தொழில்கள் செய்தும், நிலங்கள் வாங்கியும் தங்கள் காலத்தைக் கழித்துவந்தனர்.

அங்ஙனம் வந்தோர் தம் செலவுபோக எஞ்சிய பணத்தைத் தம் நாட்டுக் கனுப்பிவந்தமையாலும், புகையிலை தேங்காய் முதலாய ஏற்றுமதிப் பொருள்கள் நல்ல விலையாயிருந்தமையாலும், இன்னும் பெருந்தொகையான இளைஞர்கள் சிங்கள நாடு சென்று கடைவியாபாரஞ் செய்து அதன் மூலமாய்ப் பணந் திரட்டி வந்தமையாலுமே சென்ற பல ஆண்டுகளாக நம் நாட்டிற் பணமுட்டுத் தெரியாதிருந்தது.

அவ்வாறாக விருந்தமையின் அக்காலத்திருந்த பெரியார்களும், சட்டசபை அங்கத்தினர்களும் நம் நாட்டிற் கல்வியை மென்மேலும் வளர்த்தற்கேற்ற வழிவகைகளிலிறங்கினரேயன்றி நம் நாடு செழிப்புறச் செய்தற்கேற்ற வழிகளைத் தேடுவதற்கு முயன்றாரில்லை. அது அவர்கள் குற்றமன்று. கல்வி கற்றபின் அரசாங்க வேலையிலமர்ந்து பொருள் சேகரித்தல் எளிதெனக் கண்டவர்கள் அத்துறையைச் சீர்ப்படுத்தியது போற்றத்தக்கதே

நம் நாட்டிளைஞர்களை இனி ஒருபோதும் மலாய்நாட்டரசாங்க வேலையில் எடுக்கக் கூடாதென்பது தற்காலச் சட்டம். இலங்கையிலும் அரசாங்க வேலைகள் மிகக் குறைவு. கற்றவர்கள் தொகையோ அதிகம். கடை வியாபாரமும் படுத்துவிட்டது. புகையிலை, தேங்காய் முதலிய விளைபொருள்களின் ஏற்றுமதியும் அப்படியே! எமக்கு வேண்டிய உணவு உடை முதலியவற்றின் இறக்குமதியோ ஏராளம். அங்ஙனமாயின் வாவிற்கு மிஞ்சிய செலவு "மோட்டார் வண்டி" முதலிய போகப் பொருள்களையிட்டு எண்ணிக் குறிப்பிடத் தேவையில்லை. இவ்வண்ணம் நம் நாடு சென்றுகொண்டேயிருக்குமாயின் இன்னும் சில ஆண்டுகட்குள் நம நாட்டில் தாங்கொணாப் பணமுட்டு ஏற்படுவது திண்ணம்

மெசப்பொத்தேமியா வென்ற இடத்தை 1914—1918-ம் ஆண்டுகளில் நடந்த சண்டையின் பயனாக ஆங்கிலேயர் துருக்கியரிடமிருந்து கைப்பற்றிக்கொண்டனர். இவ்விடத்தில் அநேக ஆயிரங்கோடிக் கணக்கான நல்ல செழிப்பான நிலம் வெறுங் காடாகவே விடப்பட்டிருந்தன இது அரேபியாவின் வடகீழ் மூலையிலுள்ளது. முன்பொரு காலம் இது நல்ல விளைபொருள்கள் உணடாக்கப்பெற்ற நாடாக விருந்ததாகவும், தேனும் பாலுங் கலந்தோடுஞ் செழித்த நாடென விவிலிய நூல் விதந்து கூறும் நாடு இதுதானெனவுங் கூறுகிறார்கள். இத்தகைய நாடு துருக்கியர் ஆட்சிக்குட்பட்ட பின்னர் மேற்கூறிய நிலங்கள் வெறுங் காடாகவே விடப்பட்டன. அத்தகைய நிலங்கள் மேற்கூறியவாறு ஆங்கிலேயர் கைப்பற்றியபின்னர், அந்நாட்டிற்கு வேண்டிய நீர்ப்பாய்ச்சலுக் கேற்ற வசதிகள் அவர்கள் செய்தமையினால், அந்நாடு இன்று பல் வளமுஞ் செறிந்து பிரகாசிக்கிறது

உலகிலேயே பெரிய 'சூயஸ்' கால்வாயையும், பனமாக் கால்வாயையும் வெட்டி அவற்றினூடாக மரக்கலங்களும், நீராவிக் கப்பல்களும், புகைக் கப்பல்களுஞ் செலுத்துகின்றார்கள். நூற்றுக் கணக்கான நீளமான கால்வாய்களைத் தொடர்ந்து வெட்டி அவற்றினூடாக ஆறு நீரைக் கொண்டு சென்று அநேக [illegible] கோடிக்கணக்கான பரப்புகளை நீர்ப்பாய்ச்சிச் செழிப்புறச்செய்து விளைபொருள்களை உண்டுபண்ணுகிறார்கள். நாமும் அதுபோற் செய்யலாகும்.

மகாவலிகங்கையிலிருந்து நம் நாட்டிற்குக் கால்வாய் வெட்டித் தண்ணீர் கொணர்ந்து நம் நாட்டை நீர்ப்பாய்ச்சுவதென்றால் முடியக் கூடிய காரியமாவென்றும், அப்படி முடியுமேயானாலும் அச்செலவிற்குப் போதிய பணம் எங்கிருந்து கிடைக்குமென்றுங் கவலைகொள்ளத் தேவையில்லை. நமக்கு மனம் மாத்திரமிருக்குமேயானால் இக்காரியம் மிக எளிதாக முடிந்துவிடும்.

நாம் பத்து நூறாயிரம் மக்கள் இருக்கின்றோம். ஆளுக்குப் பத்து ரூபாய் வீதங் கொடுப்பதாயின், பத்துக்கோடி ரூபாய்களாகும். அரசினரைக் கொண்டும் அதற்கொத்த ஓர் தொகையைப் போடச் செய்தல் முடியும். இது பற்றாவிடின் நமது செலவினங்களில் வேண்டப்படாத ஒரு சிலவற்றை விடுத்து, இவ்வரும்பெருங் காரியத்

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

## "மதமென்றால் என்ன"?

—(0—

### அதன் உண்மையான அர்த்தம்.

சுவாமி அத்வைதானந்தா அவர்கள் சிங்கப்பூரிலுள்ள ருஜராத்தி கிளப்பில், சென்ற 24—5—35ல் மதம் என்றால் என்ன என்பதைப் பற்றிப் பேசினார். நரோத்தம் தாஸ் லைடிலால் கம்பெனியின் மானேஜராகிய ஸ்ரீமான் வீவ் தயால் தலைமைவகித்தார்.

சுவாமிகள் சொன்னதாவது:—

"ஏதாவது தேவை ஏற்படின் அதைக் கொடுப்பதற்கு இடமிருக்கிறது. உலகத்தின் எல்லாப் பாகங்களிலும் இயற்கையில் நடக்கும் பல காரியங்கள் இவ்வுண்மையை விளக்குகின்றன. இது சாதாரண உலகத்தில் மட்டும் உண்மையானதல்ல, ஆத்ம உலகத்திலும் உண்மையானதாகும்.

"பெருந் தன்மைக்குணம், ஆத்மத்தியாக உணர்ச்சி, தன்னடக்கம், உண்மையாயிருத்தல் எல்லோரிடமும் அன்பு" ஆகியவைகள்தான் உண்மையான மதத்தின் அர்த்தமாகும்.

"உண்மைச் சொரூபத்துடன் உள்ள மதம் அங்க சேஷ்டைகளை, அல்லது அதிசயங்களையோ, காண்பிக்கும் படி போதிக்கவில்லை.

"ஒரு மனிதனுக்கும் அவனது வாழ்வில் பல முகத்தோற்றங்க ளுள்ளன. சிலருக்கு அவன் தகப்பனாகவும், மற்றவர்களுக்கு அவன் சகோதரனாகவும், சிலருக்கு அவன் வேலைக்காரனாகவும், மற்றும் சிலருக்கு அவன் எஜமானனாகவும் இருக்கிறான்.

"ஒவ்வொரு ஜீவனுக்கும் உள்ள உண்மை போல்தான் கடவுளிடமும் இருக்கிறது. சிலர் அவரைக் 'கடவுள்' எனவும், சிலர் 'அல்லா' எனறும், 'ஈஸ்வரர்' எனறும் ஜனங்களின் வழக்கம், தன்னுணர்ச்சி முதலியவைகளுக்குத் தகுந்தவாறு அழைக்கின்றனர்.

வித்தியாசம் பாஷையிற்றான் இருக்கிறதேயன்றி உண்மையான விஷயங்களில் இல்லை. உண்மையும் முக்கியமல்லாத விஷயங்களில் இருந்த மட்டுந்தான் சண்டைகளும் வாக்குவாதங்களும் ஏற்படுகின்றன."

## பெண்களுக்குக் கல்வி.

—(o)—

### அது அவசியம்;
### ஆனால்...........

பம்பாயிலுள்ள ஸ்ரீமதி தாக்கர்ஸே இந்திய மாதர் சர்வகலாசாலைப் பட்டமளிப்பு விழாப் பிரசங்கத்தில் டாக்டர் சர். சி. வி. ராமன் பேசியதாவது:—

இந்தியாவில் எதிர்காலத்தில் நம்பிக்கை வைத்திருப்பவர்களும் உயர்ந்த தரமான கல்வியைப் பெண்கள் அடைவதன் அவசியத்தை உணராதிருக்கமாட்டார்கள். புராதனக் கல்வியும், பாரம்பரையும் நாகரிகமும் படைத்த இந்தியா இன்று இந்த நிலைமையில் இருப்பதற்குப் பெண்களின் பிறப்புரிமையான கல்வியைக்கொடாமல் அடக்கிவைத்திருப்பதே காரணம். மக்களில் பாதிப்பேர் அஞ்ஞான சாகரத்தில் மூழ்கி இருக்கும்போது எந்த ஜாதியும் முன்னேற முடியாது நான் பொதுப்படையான கல்வியைப் பற்றிப் பேசப்போவதில்லை. உயர்தர அறிவுப் பெருக்கத்தைப் பற்றியே நான் பேசுகிறேன். சாஸ்திரத்தில் மாணவர்கள் அதிகமான சிரத்தையைக் காண்பிக்க வேண்டும். இத்துறையில் சலியாத ஊக்கமே மிகுந்த அவசியமான குணமாகும்.

நமது சம்பிரதாயத்துக்குப் பாதகம் ஏற்படாமல் முன்னேற்றத்தை அளிக்கக் கூடிய ஒரு திட்டத்தை நாம் வகுக்க வேண்டும். ஆடவரைப்போல் பெண்டிருக்கும் கல்வி தேவை என்பதை இந்தியரனைவரும் உணருகின்றனர். தேச சக்தியைப் பொறுத்து இருபாலாருக்கும் தகுந்த திட்டங்களையே நாம் வகுக்க வேண்டும். மாதர் சேவை செய்ய இடமிருக்கிறதென்பதை நாம் உணர்ந்திருந்தபோதிலும் மேனாட்டு அம்சமான ஆண் பெண் தகராறில் நாம் இறங்க விருப்பம் இல்லை. இஷ்டம்போல் நடக்க ஆடவருக்கும் பெண்டிருக்கும் இடங் கொடுத்துக் குடும்ப வாழ்க்கையைப் பாழ்படுத்திக் கொள்ளல் நமது நோக்கமல்ல. ஆகவே நமது பழைய ஏற்பாடுகளுக்கு முரணாகாத வகையில் முன்னேற்றத்தை அளிக்கக் கூடிய திட்டத்தை நாம வகுக்க வேண்டும்.

# சுதந்திரம் சமத்வம் சகோதரத்வம்.

## ஹிந்துக்களுக்கு ஓர் விஞ்ஞாபனம்
## வேதகோஷங்களை அகத்துட்கொள்மின்!

### ஒரேயிறைவனின் சேயரில் ஏனோ ஒற்றுமையின்மை?

—:*:—

[இந்துவாலிபன் எழுதுவது]

ஆழிசூழ் அகிலத்தை யாளு மன்னன்: பராக்கிரமசாலி, பகைவர்க்குச் சிங்கேறு பல்லவராயன் எமது அப்பர் தம் நிலையை உணர்ந்து வரவழைத்தனன். வந்தனரா உண்மைநிலைகண்ட உத்தமன்? நாமார்க்கும் குடியல்லோம் என்று சொல்லியனுப்பினர். இந்த நிலைமையை, இந்தலட்சியத்தையே நம் ஹிந்துமதம் போதிக்கின்றது. இந்தக்கொள்கையினையே பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் அன்று குருக்ஷேத்திரத்தில் தனகடமையை மறந்து பரிதவித்த பார்த்தனுக்கு உபதேசித்தார். இந்தக் கொள்கையையே ஹிந்துமத ஆசாரியர்கள் யாவரும் அநுசரித்தனர் இதனையே இராஜபுத்னப்பெண்மணிகள் அனுட்டித்து கொலையக் கொடுங்கோன்மன்னர் வசம் சிக்குவதிலும்பார்க்கப் பொய்யா முடிமை அழிப்பதே மேல் எனத் துணிந்து அவ்வாறேசெய்து விண்ணகம் புக்கினர். இதனையே நமது விவேகானந்தர் எங்கும் முழக்கம் செய்தார் 'ஹிந்துக்காள்! அஞ்சன்மின்! அஞ்சாமை மதமே ஹிந்துமதம் என்று சுவாமிகள் அன்று கோஷம் செய்தமை இன்னும் எம் காதிற்கேட்கின்றதே இந்தக்கொள்கையையே எமது நாவலர் பெருமான் அனுட்டித்தார்.

இத்தகையவர்களை முன்னோராகப் பெற்றயாம், "அச்சமில்லை அச்சமில்லை" என்று முழக்கம் செய்த பாரதியைப்புலவராகப் பெற்றயாம் இப்போது எந்த நிலைமையில் இருக்கின்றோம்? நாம் எமது புனிதமான மதத்தின் மூலாதாரக்கொள்கையை மறந்துவிட்டோம் நாம் எமது உண்மைத்தன்மையை மறந்துவிட்டோம் மறந்து அடிமைகளென நினைந்து விட்டோம்

நாம் யார்? "நான் அதுவாகின்றேன்" என்று வேதம் முழக்கம் செய்கிறது. நாம் அந்த இறைவனின் அம்சம் பெற்றவராவோம்! எனவே நாம் அஞ்சவேண்டியதெதற்கு? எங்கும் தானேயாய் வியாபித்துநிற்கும் ஆத்மாவுக்கு அழிவுண்டா? அதனை நெருப்புச்சுடாது. தண்ணீர் அமிழ்க்காது வாள்வெட்டாது! ஈட்டி குற்றாது. குண்டு தாக்காது. விஷப்புகைமயக்காது, சிறைக்களம்நோகாது: எனவே! நாம் அஞ்சவேண்டியதெதற்கு என்று மீட்டும் கேட்கிறோம்.

ஹிந்துக்காள்! உம் நிலையைநோக்குமின்! அஞ்சன்மின்! அடலேறு எனஎழுமின்! நுங்கர்மத்தை ஆற்றுமின்!

[illegible] தட்டுக்கெட்டுத் தலைதடுமாறி நிற்பவை யாது; காலத்திற்கொவ்வாத பழக்க வழக்கங்களையும் சம்பிரதாயங்களையும் தகர்த்தெறிமின்! எம் சமூகத்தில் உள்ள பிரிவினைகளை நீக்கி எல்லோரையும் ஒன்று சேர்மின் சுதந்திரம், சகோதரத்துவம் சமத்துவம் என்று வேதங்கள் கோஷிப்பதைக் கிரியாம்சத்திற் கொண்டுவரக் கங்கணம் கட்டுங்கள்!

ஹிந்து சமூகம் உஜ்ஜீவிக்கவேண்டும் அது இப்போது மிகவும் பெலனற்றதாய் இருக்கின்றது அந்நியரின் மாய வலைக்குட் சிக்கி இச்சமூகத்தில் உள்ள பலர் ஆயத்தமாகவிருக்கின்றனர். அவர்களுக்கு எமது மதத்து உண்மைகளைக் கிரியாம்சத்திற் காட்டி அம்மாயவலைகளை அறுமின்!

உலகிற் பிறந்துள்ளோர் யாவரும் ஒரேயிறைவன்சேயரே! யாவரும் ஒன்றே: பேதம் இல்லை! இந்த உண்மையைநாம் எல்லோரும் உணர்ந்து கர்மாவைப் புரிவோமானால் எமக்குள் வேற்றுமை என்பது ஏற்படும் காரியமா? எம்சமூகம் சிதறுண்ணக்காரணம் உண்டா?

# தாயில்லாப்பிள்ளையின் தலைவிதி!

## தந்தையின் கொடுமை? மாற்றாந்தாயின் உதவி? கொதிக்கும்எண்ணெயை வாய்க்குள் ஊற்றினராம்!

### தும்பளைச் சிறுமிக்கு நேர்ந்த கதி. நீதிஸ்தலத்தில் விசாரணை விபரம்

[நமது நிருபர்]

பருத்தித்துறையைச் சேர்ந்த தும்பளை வாசியான ஆறுமுகம் சின்னையாவும் அவர் மனைவி பாறுவதிப்பிள்ளையும், சின்னையாவின் முதல் தாரத்துப் பிள்ளையான பாக்கியம் என்னும் 8 வயதுச் சிறுமியை மிகக் கொடுமையாக நடத்தித் தேகதீங்கு விளைத்தனர் என்று தும்பளை உடையாரால் பருத்தித்துறைப் பொலிஸ் நீதிஸ்தலத்திற் குற்றஞ்சாட்டப்பட்டனர்.

கொதிக்கப்பட்ட எண்ணெயை ஷெ சிறுமியின்வாய்க்குள் ஊற்றியமையினால் அவ ளின்வாய், கன்னம் என்பன மிகவும்வீங்கிய பரிதாபநிலையில்நீதிஸ்தலத்திற்குக் கொண்டு வரப்பட்டாள்.

பாக்யம் என்னும் ஷெ சிறுமி பின் வருமாறு நீதிபதிக்குக் கூறினாள்:—

சின்னையா என்னுடைய தந்தையே! எனது தாய்சிலவருடங்களுக்குமுன் இறந்துவிட, அவர் இரண்டாம தாரமாகப் பாறுவதிப் பிள்ளையைக் கலியாணஞ் செய்தார். 15 நாட்களுக்குமுன், எண்ணெயைக் கொதிக்கவைத்து அதனை அவர் எனது வாய்க்குள்ளும், கை, கன்னம் என்பவற்றின் மீதும் ஊற்றினர். நான் தேங்காய்த் துருவ மறுத்தமைக் காகவே என் தந்தை எண்ணெயை ஊற்றினர். எண்ணெயை எனது சிறிய தாயே கொண்டுவந்தா. இதன் பின்னரும் ஒருநாள் என்னை அவா பலமுறை பிரப்பினால் அடித்து என் பாட்டி வீட்டுக்கு ஓடு என்று கலைத்தார். இந்தக் கொடுமைகளையறிந்த ஆரோ பொலிஸ் விதானையை அழைத்துக்கொண்டு வநதனர். விதானை என்னை ஓர் வண்டியில் ஏற்றிப் பொலிஸ்தானத்திற்கு அழைத்துச் சென்றார். அங்கிருந்து நான் ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டேன்.

P. S. கனகசபையின் சாட்சியம்.

"நான் முதலாம் எதிரி சின்னையாவின் அயலவன். எதிரியின் முதலாம் மனைவி காலஞ் சென்றவிட அவர் இரண்டாம் தாரமாகப் பாறுவதிப்பிள்ளையை விவாகம் செய்தார். அக்காலத்தில் பாக்கியம் என்னும் பிள்ளை தனது பாட்டியுடன் வசித்து வந்தாள். முதலாம் எதிரி தாபரிப்புப் பணம் கட்டி வந்தார்.

"இக்கப் பிள்ளையை முதலாம் எதிரி நிந்தாட்சணியமாய் நடாத்துகின்றார் என்பதை அறிந்தயான் மாகாணப் பொலிஸ் தலைவருக்கு ஓர் பெட்டிசம் அனுப்பினேன். சென்ற 5-ம் தேதி இவ்வெதிரி குறித்த பிள்ளையைக் கொடூரமாக நடாத்துகின்றார் என்பதைக் கேள்விப்பட்டேன். அவள் முகத்தின் மீதும் தேகத்தின் மீதும் பல காயங்கள் காணப்பட்டன. நான் என்ன நடந்தது என்று கேட்டேன்: உதடுகள் வீங்கியிருந்தபடியால் அவளால் மறுமொழி சொல்ல முடியவில்லை. நான் அவளைப் பொலிஸ்தானத்திற்கு அழைத்துச் சென்று அங்கிருந்து ஆஸ்பத்திரிக்கு இட்டுச் சென்றேன்.

K. பெரியதம்பியின் சாட்சியம்.

"நான் வசிப்பது எதிரி வசிக்கும் வளவிலேயே. என்வீட்டிற்கும் எதிரியின் வீட்டிற்குமிடையே ஓர் வேலியுண்டு இப்பிள்ளை இப்போது இரண்டு இரண்டரை மாத காலமாகவே தகப்பனுடன் வசித்து வருகின்றாள். அதற்கு முன் தன் பாட்டியுடன் வசித்தவள் பாட்டி இப்போது இறந்து விட்டாள் ஒவ்வொரு நாளும் முதலாம் எதிரி தன் பிள்ளையை அடித்துத் துன்புறுத்துவது வழக்கம். 10 நாட்களுக்கு முன் இப் பிள்ளை "ஐயோ என்று கத்துஞ் சத்தங் கேட்டது. நான் ஓடிப் பார்க்கும் போது இப் பிள்ளையின் முகத்தின் மேலும் தேகத்தின் மேலும் எண்ணெய் காணப்பட்டது. எதிரி 'சிலேற'றாலும் அப்பிள்ளையை அடித்து, பேனாக் கத்தியால் காலிற் குற்றினார். ஏனப்பா இந்தப் பிள்ளையை இப்படி வருத்துகிறாய்? என்று நான் கேட்க, "நீ உன் அலுவலைப்பார்" என்று அவர் எனக்குக் கூறினார். எண்ணெய் ஊற்றப்பட்டபடியால் சிறுமியின் தேகம் எங்கணும் கொப்புளங்கள் காணப்பட்டன."

இதன்பின் பருத்தித்துறை டக்ராான ஸ்ரீ குலநாயகம் அவர்கள் சாட்சியம் பகர்ந்தார். ஷெ பிள்ளையின் தேகத்திற பல மாறின காயங்கள் இருந்தனவென்றும், முகம், தேகம் எங்கணும் புதுக் காயங்கள் காணப்பட்டன வென்றும், எண்ணெய் ஊற்றுண்டபடியால் ஏற்படக் கூடிய பல காயங்கள் காணப் பட்டன என்றும் அவர் கூறினார்.

இதன்பின் வழக்குத் தவணையிடப்பட்டிருக்கிறது.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

திற்குக் கொடுக்கலாகும். நமது கோயில்களில் வீண் செலவுகள் எத்தனையோ இருக்கின்றன. தாசிகள் நடனத்தை முற்றும் நீக்கலாம். வாணவேடிக்கையையுங் குறைத்துவிடலாகும். நீர்ப்பாய்ச்சல் ஏற்பட்டுவிடின் அதன்மேல புதிய கிணறுகள் வெட்டுவதுங் கட்டுவதும நின்றுவிடும். இவ்வினங்களில் எஞ்சுவனவற்றையும் மேற்படி நிதியுடன் சேர்த்துவிடலாகும்.

அங்ஙனந் திரட்டிய நிதியை அரசாங்கத்தினிடங் கொடுத்து அதற்க கஓர் சட்டம் இயற்றுவித்து இன்னுமாகவேண்டிய காரியங்களைச் செய்வித்தற்தவேண்டும் முயற்சி யெடுப்பதற்குச் சட்டசபை உறுப்பினர்கள் முன்னின்று நிற்றல் வேணடும். இதனை ஒரு முப்பது ஆண்டுகட்கு முன்னர்ச் செய்ய வேண்டுமென அக்காலத்திருந்த சட்டசபை அங்கத்தினர் (கௌரவ குமாரசுவாமி, இராமநாதன் போன்றோர்) முயன்றிருந்திருப்பின், வெகு எளிதாகச் செய்து முடித்திருக்கக்கூடும். அப்படிச் சொல்வதால் தற்காலமிருக்கும் சட்டசபையங்கத்தவர்கள் முற்கூறியவர்களுக்குக் குறைந்தவர்களென்பது என் கருத்தல்ல. அக்காலத்திருந்த சட்டசபைச் சட்டங்களும் ஒழுங்குகளும் வேறு—தற்காலத்துள்ளன வேறு. அதன்படி செய்வித்தல் எளிது. இதன்படி செய்வித்தல் மிகவுங்கடினம். இருந்தும் இவர்கள் தங்களாலானமட்டும் பாடுபட்டால் கிடைக்காமற் போவதில்லை "ஞாலங் கருதினுங் கைகூடுங் காலங் கருதி யிடத்தாற் செயின்" என்பது உறுதி மொழியல்லவா?

குழந்தை அழுதாற் தால்—சும்மா அழுதாற போதியதல்ல — பெலத்த சத்தம் போட்டுக் கதறிக் கதறி அழவேண்டும். அப்போதுதான் அதற்குப் பசி வந்துவிட்டதெனத் தாயானவள் பதறிப் பதறிபோடிப் பரிவுடன் பால் கொடுப்பாள். அதுபோலவே நாமும் நம்ம நாட்டிற்கு நீர்ப்பாய்ச்சல் வேண்டுமென்பதாகக் கூக்குரலிடவேண்டும். அழவேண்டும். கூட்டங்கள் கூட்டிக் கிளர்ச்சி செய்யவேண்டிய அரசாங்கத்தைக் கேட்கவேண்டும். சட்டசபைகளிலிவற்றை யெடுத்தாள வேண்டும். நாம் போடுங் கூக்குரல் வானைப்பிளக்கவேண்டும். அப்போதுதான் நமக்கு வேண்டியது கிடைக்கும். நாம் விரும்பியது கிடைக்கும் வரை முயற்சியுடன், தைரியத்துடன், நம்பிக்கையுடன், ஊக்கத்துடன் நாம் வேலை செய்தல் வேண்டும். இடையிற் தூங்கிவிடுதல் கூடாது.

அன்பர்காள! இவ்வாறாக நம் நாட்டிற்கு நீர்ப்பாய்ச்சல் ஏற்படுத்தப் பெறின், நம் நாடு எவ்வளவு செழிப்பாக இருக்குமென்பதை உங்கள் அகக் கண்ணாற் சிறிது சிந்தித்துப் பார்ப்பின், அதன் உண்மை விளங்கும். அப்போது நம் டிறவின் முறையாரையும் பற்றேனைய நண்பர்களையும் விடுத்து நாமேன் மறுநாடுகளுக்குப் போகவேண்டும். மேலே சித்திரிக்கப் பெற்றுள்ளது போன்ற ஓர் நாடு நமக்குக் கிடைத்தால், அதை நாம பொன்னாடு, அழகியநாடு, செழித்தநாடு என்று பலபடச் சொல்வதையல் வேறெவ்வாறு சொல்லுதல் முடியும். இதுபற்றியன்றோ ஔவையாரும் "ஆறில்லா ஊருக்கழகு பாழ்" என்றும், "நீரகம் பொருந்திய ஊரகத்திரு" என்றுந் திருவாய் மலர்ந்தருளினர்".

## வீட்டுக்கு நெருப்பு வைத்தாராம்?

—):×:(—

மனைவிமீதுகொண்ட மனஸ்தாபம்

—o—

திருநெல்வேலியிற் சம்பவம்!

(நமது நிருபர்)

திருநெல்வேலியில் வசிப்பவரான பொன்னையா என்பவர் அவ்வூர் பூரணம் என்னும் பெண் வசிக்கும் வீட்டிற்கு நெருப்புவைத்தார் என்ற குற்றஞ் சாட்டப்பட்ட வழக்கு சென்ற செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணப் பொலிஸ் நீதிஸ்தலத்தில ஸ்ரீ K. ஆழ்வாப்பிள்ளை அவர்கள் முன்னிலையில் விசாரணை செயயப்பட்டது.

எதிரியின் மனைவி எதிரியுடன் மனஸ்தாபம் கொண்டு தனது சகோதரியான பூரணம் வீட்டிற்கு சென்று வசித்தாளெனறும், இதனையறிந்த கோபம் கொண்ட எதிரி பூரணம் வீட்டிற் சென்று எல்லோரையும் ஏசிவிட்டு, வீட்டுக்கு நெருப்புவைப்பதாகப் பயமுறுத்திச் சென்றார் என்றும் தெரிகிறது.

எதிரி மீண்டும் $5\frac{1}{2}$ மணியளவில் பூரணம் வீட்டுக்கு வந்து, தனது மாமனின் படுக்கையிற் படுத்திருந்தார்; $\frac{1}{2}$ மணித்தியாலத்தின் பின் சென்றுவிட்டார். இரவு 8 மணி வரையில் வீடு கொழுத்தப்பட்டது. என்று சொல்லப்படுகிறது.

சென்ற செவ்வாய்க்கிழமை நீதிபதி பூரணத்தின் சாட்சியத்தைப்பெற்றபின்னர் எதிரியை 250 ரூபாப்பிணையில் போகுமாறு உத்தரவிட்டு வழக்கை 18-7-35 இற் குத் தவணையிட்டார்.

## பழைய என்ஜினியர்மீது வழக்கு.

மானிப்பாயில் வசிப்பவரும், டிஸ்திரிக் என்ஜினியராயிருந்து இளைப்பாறியுள்ளவருமான மிஸ்டர் S. M. S. இராசசூரியர் என்பவர், தம்மீது கொழும்பு டிஸ்திறிக் நீதிஸ்தலத்தில் உள்ள வியாச்சியம் சம்பந்தமாக விருந்து கொண்டுசென்ற பிஸ்கால் உத்தியோகத்தரைக் கடமை செய்யவிடாது தடுத்தார். என்ற வழக்கு சென்ற 9-7-35 இல் 13-7-35 இற்குத் தவணையிடப்பட்டது.

## மானிப்பாய்க் கொலைவழக்கு

ஷெ கொலைவழக்குச் சுப்பிறீம்கோட்டுக்குப் பாரப்படுத்தப்பட்டது.

## Notice of Sale

### கோட்டுக் கொம்மிசன் விற்பனவு அறிவித்தல்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்

இல. 3702.

பரித்தித்தறை தற்காலம் சென்னபட்டணம் வேலுப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை இவரின் அற்றேணித் தத்துவகாரன் பரித்தித்துறை வேலுப்பிள்ளை நாகப்பர். வழக்காளி.

எதிராக.

பரித்தித்துறை வேலுப்பிள்ளை கந்தசாமி; இவர்யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டு 6386ம் இலக்க மரணசாதனத் தத்துவகாரனும் அற்றேணித் தத்துவகாரனும். 2. ஷயூர் அருணசலம் இராமலிங்கம், 3. ஷ அருணசலம மகள் பறுபசம் 4. அருணசலம் மகள் பறுபதபத்தினி 5. வயிரமுத்து அருணசலம் 3ம் 4ம் எதிரிகள்பராயமற்றவர்கள்; இவர்களின் பராபரிப்புக்காரன் பருத்தித்துறை கணபதிப்பிள்ளைநடராசாவும் பெண்மனேன்மணியும்.

இதன்பின்னுற் காணப்படும் ஆதனங்கள் கொம்மிசனர் கு. வேலாயுதர் நாகலிங்கம் ஆகிய என்னால் 1935-ம் ஆண்டு ஆவணிமீ 5-ந்திகதி திங்கட்கிழமை காலமே 10மணிதொடக்கம் குறித்த காணிகளிடமாக விருந்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### ஆதனங்களின் விபரம்.

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திக் வடமராட்சிப்பகுதி பருத்தித்துறைக் கோவிற்பற்று பருத்தித்துறை வென்றிபாகு தேவன் குறிச்சியிலை மாகாளி தேவன் சீமா நில. பர. $3\frac{1}{8}$ ஷ வீடு 2 ஷ கிட்டங்கி வீடு 1 இவைகளில் நில.பர. $3\frac{1}{4}$க்கும் அதற்குட்பட்ட தென்னைகள் மண்வீடுகள் கொட்டில்கள் கல்வீட்டுக் கட்டடமும் எல்லை கிழக்கு நாகப்பர் அருணசலத்தின் உரிமைக்காரருக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம், வடக்கு சித்திவிநாயகப்பிள்ளையார் கோவிலுக்குடைய மடம்; மேற்கு சித்திவிநாயகப் பிள்ளையார் கோவிலுக்குடைய ஆதனமும் தர்மலிங்கம் முத்துக்குமாருவுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனமும்; தெற்கு நாகப்பர் அருணசலத்தின் உரிமைக்காரருக்கும் மறுபேருக்குமுடைய ஆதன ; இதில் நிலத்திற் சோரியலாய் $\frac{2620747}{2723772}$ பங்கும் மண்வீடுகள் கொட்டில்களுஞ் சோரியலாய் $\frac{77}{120}$ பங்கும் மேற்குப்புறத் அறையில் $\frac{3}{4}$ பங்கும் கல்வீட்டில் கிழக்கறைகள் நடுஅறைகள் முழுவதும்.

2. ஷயிலை வாணதராயன் குடியிருப்பு நில. பர. $7\frac{3}{8}$ இதில் ஆட்சிப்படி நில. பர. 3க்கும் அதற்குட்பட்ட பனைகள் தென்னைகளுக்கு மெல்லைகிழக்கு தெய்வர் நாகலிங்க முதலியாரின் உரிமைக்காரருக்குடைய ஆதனம்; வடக்கு சின்னத்தம்பி பெண் சிவகாமனின் உரிமைக்காரருக்கும் மறுபேறுக்குமுடைய ஆதனம்; மேற்கு உவெஸ்லியன் மிஷனுக்குடைய ஆதனம் தெற்கு கையொழுங்கையும் பெரியதம்பி மகள் பாக்கியத்தத்தும் மறுபேருக்குமுடைய ஆதனம் இது முழுவதும்.

3. ஷயிலை சங்கணம்பற்றை நில பர. $1\frac{3}{8}$ ஷ தோட்டம் $\frac{1}{2}$ ஷ வீடு 1 இதிலாட்சிப்படி குளி $5\frac{1}{2}$க்கும் அதற்குட்பட்ட கிணற்றுக்கும் எல்லை கிழக்கு தெற்கும் ஒழுங்கை; வடக்கு கையொழுங்கை மேற்கு பெரியதம்பிமகள் பாக்கியத்திற்கும் மறுபேருக்குமுடைய ஆதனம் இதில் சோரியலாய் அரைவாசியும்.

கு. வே. நாகலிங்கம்,
கொம்மிசனர்.

1935ம் ஆூ ஆனிமீ 26உ.
(Mis 99. 11-7 35)

# வீரமாகாளிகோவிலில் வாணவேடிக்கை.

## இருவர்க்குக் கடுங்காயம்: கிழவிக்குஊறு உடையைக் களைந்து நிர்வாணமாய் ஓடினர்!

### தாஸியர் நடனம்: சுவாமியின் வீதிவலம் வேடிக்கை பார்த்தவர்களின் அலங்கோலம்.

(நமது நிருபர்.)

சென்ற செவ்வாய்க்கிழமை யிரவு வண்-கிழக்கு வீரமாகாளியம்மன் கோவிலில், தாஸியர் நடனம், வாண வேடிக்கை, மேளக்கச்சேரி என்பன சகிதமாக அலங்காரோற்சவம் நடைபெறுமென ஏற்கெனவே அறிவிக்கப்பட்டது. யாழ்ப்பாணத்தின் பலபாகங்களிலுமிருந்து பன்னூற்றுக்கணக்கானோர், மகாதோரணங்களாலும், வாழைகளாலும், கண்ணாடிச் சிகரங்களாலும் அலங்கரிக்கப்பட்ட ஷெ கோவிலில் பொழுதுசாயுமுன்னரே குவியத் தொடங்கினர். யாழ்ப்பாணத்தில் இப்போது இறக்குமதி செய்யப்பட்டுள்ள தாஸியர் பலர் அங்கு வந்து தங் கச்சேரியை நிகழ்த்தினர் மேளக்கச்சேரி நிகழ்ந்தது. இரவு 2 மணி வரையில் திருவுலா நிகழ்ந்தது.

திருவுலா நிகழும்போது வாண வைபவமும் நடந்தது. அப்போது ஓர் "ஊர் ஆகாச" வாணம் இலக்குத்தப்பி வேடிக்கை பார்த்துநின்ற இருவர்மீது மோத அவர்களது கால்கள் முறிந்தன. இன்னொருவர் மீது வாணக்குழாய் வீழ்ந்தமையினால் மண்டை நொருங்கியது. ஒருவர் உடுத்திருந்த சாரத்தின்மீது வாணப்பொறி பற்ற, அவர் அப்படியே சாரத்தைக் களைந்தெறிந்துவிட்டு நிர்வாணமாய் ஓடினாராம்.

கால் முறிந்தவர்களுள் ஒருவர் சேனிய தெருவில் வசிக்கும் காயணசாமிச்செட்டி கிருஷ்ணசாமிச்செட்டி என்பவராம்! இவர் குருநாகலில் வியாபாரம் செய்பவர். இவர் மிக்க ஆபத்தான நிலைமையில் நாயன் மார்கட்டு ஆஸ்பத்திரிக்கு அழைத்துச்செல்லப்பட்டு இப்போது குணமடைந்துவருகின்றார் என்று தெரிகிறது.

மற்றவர் வண்-தட்டாதெருவில் வசிக்கும் கணபதிப்பிள்ளை செல்லையா என்பவராவர்.

இவர்களைவிட ஓர் பள்ள கிழவிக்கும் கையில் காயங்கள் ஏற்பட்டனவாம்.

ஷெ கோவிலில் வாணங்கொழுத்துவதற்கு "லைசென்ஸ்" என்னும் அநுமதிப் பத்திரத்தை ஷெ கோவில் அதிகாரிகளோ, உபயக்காரரோ பெறவில்லை என்று தெரிகிறது.

## விவாகசோபன விஞ்ஞாபனம்.

நிகழும் 1935-ம் ஆண்டு ஜூலை மாதம் 12ம் தேதி வெள்ளிக்கிழமையிரவு 7 மணி வரையில் நிகழும் சுபமுகூர்த்தத்தில் எனது புதல்வி சௌபாக்கியவதி ஞான சவுந்தரி அம்மாளை, யாழ்ப்பாணம் காணிப் பதிவுக்கந்தோர் ஸ்ரீ N. இராமலிங்கம் அவர்களுக்கு விவாகம் செய்து கொடுக்க நிச்சயித்திருக்கின்றபடியால், அச்சமயம் தங்கள் சமூகத்தைக் கோருகின்றேன்.

இங்ஙனம்,
T. K. பொன்னையா
(இளைப்பாறியுள்ள விதானையார்)

"ஞானவில்லா,"
தெல்லிப்பழை.
(Mis. 102. 11 7-35.)


# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம்: யுவஸு ஆனிமீ ௨௭ வியாழக்கிழமை.


## இடம்ப வாழ்க்கையும் வீண் செலவும்.

இலங்கையின் பிரதான பட்டினங்களில் நடக்கும் கைத்தொழில் வியாபாரம் முதலிய முயற்சிகளைக் கண்டு இலங்கைமக்கள் இந்நாட்டின் பொருளாதார நிலையிற் குறைவில்லையென்று இறுமாந்திருந்தார்கள். ஆனால், சில வருடங்கட்கு முன்பதாக இங்கு நேர்ந்த பணப்பஞ்சமும் தொழின் முயற்சியின்மையும் சென்ற வருடம் இந்நாட்டின் பெரும் பாகத்தில் வசிப்போரைப் பீடித்து வருத்திய "மலேரியா" எனப்படுங் காட்டுக் காய்ச்சலும் இலங்கை மக்களின் இறுமாப்பு ஆதாரமற்றதென்பதைக் காட்டிவிட்டன. இனி, அரசியல் விஷயங்களில் ஈடுபட்டு உழைப்போர் இந்நாட்டில் வசிக்கும் கற்றவர் சிற்சிலர் நந்தியவர்களென்றிருப்போரின் நன்மையையிட்டு ஒரு அளவிற்கு உழைத்தாரே யல்லாமல் பொருள்வரவிற்குக் காரணராயுள்ள சாமானிய சனங்களின் வாழ்க்கையையிட்டுச் சிறிதேனுஞ் சிந்தித்திலர் எனலாம். நமது அரசினர் பொருளாதார நிலைமையைப் பற்றிப் பேச நேர்ந்தால், அரசாங்க பொக்கிஷசாலையில் பரிபாலனச் செலவின் பின் எஞ்சிய பணம் அதிகமுண்டென்றும், வியாபார விஷயத்தில், இந்நாட்டிலிருந்து வேற்று நாடுகளுக்கு ஏற்றுமதியாகும் பொருள் இறக்குமதியாகும் பொருளைக் காட்டிலும் பன்மடங்கு அதிகமானதென்றும் ஆனதால் இலங்கை செல்வமான நிலைமையில் இருக்கின்றதென்றும் வாதித்து வருவாராயினர். இலங்கையிலிருந்து ஏற்றுமதியாகும் பொருள் பன்மடங்கு அதிகம் என்பது நிசந்தான். ஆனால் அந்தப்பொருள் யாருக்குரியது? அப்பொருளால் இலாபம் அடைபவர் யார்? என்ற இவைகளை உள்ளபடி ஆராய்ந்து பார்க்கப் புகுந்தாலன்றே உண்மை வெளிப்படும். இலங்கையிலிருந்து வேற்றுநாடுகளுக்கு அனுப்பப்படும் பண்டங்களுட் பிரதானமானவை றப்பர் தேயிலை கொக்கோ என்னுமிவைகளாகும். பெரும் முதலிட்டு இப்பொருள்களை இங்கே ஆக்குவிப்பவர்கள் ஐரோப்பிய தோட்ட முதலாளிகளேயாவர். இவைகளினால் நயமடைவோர் அவ்வைரோப்பிய சமுதாயிகளும் தொழில் பெறும் இந்திய கூலிச் சனங்களுமேயாவர். இதனை இலங்கையிற் சாசுவதமாக வசிக்கும் தமிழ சிங்களமக்களுக்கு யாதும் ஊதியமும் இல்லையென்பது புலப்படக் கிடக்கின்றது. இப்பொழுதுதான் இலங்கை மக்களுள் விவேகிகளாயுள்ளார் அரசினர் சொல்லும் இப் பொருந்தா நியாயங்கள் தவறெனவை யென்பதை உணரத் தலைப்பட்டனர்.

சிலதினங்களின் முன் ஸ்ரீ க. பாலசிங்கமவர்கள் கொழும்பில் ஒரு உபந்நியாசஞ் செய்தபோது, இவ்விலங்கையின் பொருளாதாரம் மிகவுங் கேவலமான நிலைமையில் இருக்கின்றதென்பதை எடுத்துக் காட்டியுள்ளார். இலங்கையிலுள்ள செல்வத்தைச் சராசரியாகப் பகிர்ந்து கணக்கிட்டால், ஒருவனுக்கு 100 ரூபா விகிதம் வருமென்றும் இங்கிலாந்திலுள்ளவர்களுடைய செல்வத்தையும் அப்படியே பிரித்துப் பார்த்தால் ஒருவனுக்கு 700 ரூபா விகிதம் வருமென்றும் ஸ்ரீ பாலசிங்கமவர்கள் எடுத்துக் காட்டியுள்ளார். இனி நம்மைப் பரிபாலிக்கும் அந்நிய அரசினரேனிலோ நமது நாட்டினைக் கைத்தொழிற்காகிய பொருள்களைப் பெறுதற்கும் அப் பொருள்களைத் தங்கள் நாட்டிற்கு ஏற்றிச் சென்று கைத்தொழில் செய்து முடித்தபின் கொண்டுவந்து விற்றற்கும் வாய்ந்த நாடாக மதித்து அப்படியேசெய்து வருகிறார்கள். இந்த இலங்கையில் அன்றடித்து அன்று வாயிலிடும் நிலையிலுள்ள ஏழைமக்கள் பல்லாயிரக் கணக்கானோர் இருக்கின்றார்கள். இன்னும் எத்தனையோ ஆயிரக்கணக்கான ஏழைகள் ஒரு நாளைக்கு ஒரு நேர உணவிற்குத்தானும் வகையின்றிப் பட்டினி கிடக்கின்றார்கள். ஆனால் நமது அரசினரேனிலோ இந்நாட்டிலே முதற் காரணமாகவுள்ள பொருள்களை இந்நாட்டுச் சனங்களே கைத்தொழிலைச் செய்து ஈடேறட்டும்என்ற எண்ணம் எள்ளளவுமின்றி இருக்கின்றார்கள். இதுமட்டுமா? இல்லை! இல்லை!! பரிபாலனச் செலவை வருடந்தோறும் ஏற்றி ஏற்றி வருவாயில் நூற்றுக்கு 50 விகிதமான பணத்தைப் பரிபாலனத்தின் பொருட்டுச் செலவு செய்கின்றார்கள். அரசினருடைய செயல் பூச்செடியிற் பூவைமாத்திரம் பிடுங்கிக்கொண்டு செடியைவிடாது, செடியையும் வேரோடு பிடுங்குவதுபோல் இருக்கின்றது. இப்பட்ச பாதமான செயல் பரிபாலனஞ் செய்வோர்க்கு முறையானதன்று. அரசினர் நம் நாட்டினர்க்கு நேர்ந்த கேட்டையிட்டுச் சிந்தியாது வாளாவிருந்தலால், நாட்டிலேயுள்ள அபிமானிகள் காரியமறிந்தவர்கள் சனப்பிரதிநிதிகள் மந்திரிமார் முதலானோர் இம்மர்மங்களை யெல்லாஞ் சனங்களுக்கு எடுத்துக் காட்டி, கைத்தொழில் கமத்தொழில் வியாபாரமென்னுமிவைகளை இந்நாட்டினரே தம் பொறுப்பில் நிர்வகித்து நடாத்துவதற்கான வழிவகைகளைக் காட்டிக் கொடுத்தல் வேண்டும். இவற்றைக் கொண்டு நடாத்தக்கூடிய சங்கங்களை ஏற்படுத்தி விடுதல் வேண்டும் இந்நாட்டின் பொருளாதார நிலைமையினைச் சாமானிய சனங்களுக்கு நன்கு தெருட்டுதல்வேண்டும். சனங்கட்குப் புத்தூக்கத்தைப் புகுத்தி விடல் வேண்டும். இங்ஙனம் செய்யாக்கால் இந்நாடு பிரித்தானியர் பரிபாலன காலத்தில் ஈடேற்றமடையுமென்பது சந்தேகம். மேலே சொல்லப்பட்ட மூவகையான முயற்சிகளால் மாத்திரம் ஒருநாடு ஈடேறுமென்று எண்ணிக்கொள்ள வொண்ணாது. வரவுக்குத்தக்க செலவு என்ற வாக்கியம் எல்லார் உள்ளத்திலும் பதிந்திருக்குமேயானால் எவ்வகையான குறைவும் இல்லையெனலாம். இவ் விலங்கையில் வாழும் ஒவ்வொரு சாதியார் ஒவ்வொரு சமயத்தாரிடத்தும் சாதிசம்பந்தமான சமய சம்பந்தமான கொண்டாட்டங்களும் கிரியைகளும் உண்டென்பதை ஏற்றுக்கொள்வர். இப்படியான விசேஷ காலங்களில் இந்நாட்டினர் செல்வர் வறியவர் என்ற பேதமின்றி எல்லாரும் மனம்போனவாறு பொருட்செலவு செய்யத் தலைப்படுகின்றனர். விவாககாலங்களில் இழவு நேருஞ் சமையத்தில் இங்கே செல்வரென்றிருப்போர், செல்வருள்ளும் புதுப்பணம் படைத்தவர் உண்டாட்டுக் களியாட்டு முதலாய வீண் விஷயங்களிற் பெருந்தொகையான பணத்தைத் துர்விநியோகஞ் செய்கின்றனர். இவர்களைப் பார்த்துவிட்டு, கானமயிலாடக் கண்டிருந்த வான்கோழி — தானும் அதுவாகப் பாவித்துத் — தன், பொல்லாச் சிறகைவிரித்தாடினற்போல ஏழைகளாயுள்ளாரும், பின்முன்பாராது பெருந்தொகையான பணத்தைக் கடன்பட்டேனும் அநியாயமாகச் செலவிடுகின்றார்கள். இனி, சமய சம்பந்தமாகச் செய்யப்படும் திருவிழா முதலிய சத் கருமங்களிற்றானும், சமயபக்தி ஆன்மஈடேற்றம் என்னுமிவை சட்கு உரிய கிரியைகளையும் அறச் செயல்களையும் அலட்சியஞ் செய்துவிட்டு வாத்தியம் வாணவேடிக்கை நாட்டியம் மதுபானம் என்னும் இப்படிப்பட்ட வீண் விஷயங்களில், தாம் பாடுபட்டுத் தேடிய பணத்தைச் செலவழித்துவிட்டு, குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக்கொள்வார்போல், தாம் இலக்காகக்கொண்ட நன்மையினைப் பெறாய் இடர்ப்படுகின்றனர். இப்படிப்பட்டவர்கள் நாட்டின் ஈடேற்றத்தின்பொருட்டு கல்வி விருத்தியின் பொருட்டு, கைத்தொழில் கமத்தொழில் வியாபாரம் என்னும் இவைகளை நன்னிலைப்படுத்தும் பொருட்டு ஒரு சதமேனும் கொடுப்பரோ வெனில் ஒருபோதும் கொடுக்க மனம் ஒருப்படார். தாங்கள் ஈடேறவேண்டு மெனக்கண்டால் இப்படியானவர் இவ்வகையான இடம்ப வாழ்க்கையையும் வீண் செலவுகளையும் அறவேயொழித்துச் செல்வராகிய தாமும் வறியாரும் எல்லாரும் பயனடையும்வண்ணம் தம் பொருளைப் பயனுள்ள கருமத்திற் செலவிடுதல் வேண்டும்,

# கண்ணோட்டம்.

### நமது சுருட்டுத் தொழில்.

ஓர் காலத்தில் நம் யாழ்ப்பாணம் சுருட்டுக்கிருந்த மதிப்புக்கும் செல்வாக்கிற்கும் ஓர் எல்லையில்லை எனலாம். உலகெங்கும் அது போற்றப்பட்டு வந்தது. அதனால் செல்வந்தரானோர் அனேகர்: பல்லாயிரக் கணக்கான ஏழைமக்கள் அதன் மூலியமாகத் தம் சீவியத்தைக் கௌரவமாகவும் மரியாதையாகவும் கழிக்க முடிந்தது. ஆனால் யாழ்ப்பாணத்துச் சுருட்டுத்தொழிலின் தற்போதைய நிலைமையென்ன? அழிந்தொழிந்து போகும் நிலைமையில் இருக்கிறது. இதற்குக் காரணமென்ன? பீடிகள் மிக்க மலிந்த விலையில் இறக்குமதியாவது, இங்கேயே சிகரற் ஆக்கப்படுவது, தென்னிலங்கையில் யாழ்ப்பாணம் சுருட்டைப்போன்ற சுருட்டு ஆக்கப்படுதல் என்பனவே காரணம் என்று சிலர் கூறுவர். இவை, இக்கைத்தொழில் வீழ்ச்சிக்கான சில காரணங்களாயிருக்கலாம். ஆனால் இத்தொழிலின் க்ஷீணநிலைமைக்குப் பிரதான காரணம் இத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களின் பாராமுகமே யென்று துணிவாய்க் கூறலாம். இவர்கள் தம் தொழிலைக் காலத்திற்கேற்றவாறு மாற்றியமைப்பதில் தவறிவிட்டார்கள். வீட்டுக்கு வீடு மூலைக்குமூலை சுருட்டுக் கொட்டில்கள் அதிகரித்தன. ஆனால் ஆங்கு ஆக்கப்படும் சுருட்டில் எவ்வித திருத்தமும் குட்டி முதலாளிமாரும் பெரிய முதலாளிமாரும் செய்ய நினைத்தாரல்லர். நம் நாட்டவர் ஏன் சுதேசப் பொருளாகிய சுருட்டை விடுத்து அதிகம் விலைகொடுத்து அந்நிய சிகரற் புகைக்கின்றனர் என்பதை நம் முதலாளிமார் சிந்திக்கவில்லை. சிகரற் புகைப்பவர்கள் சுதேசாபிமானம் அற்றவரா? இல்லை! அவர்கள் சிகரற் அதிகம் காரமில்லாதது: நறுமணம் வீசுவது: நன்றாக நெருப்புப்பற்றுவது என்பதை உணர்ந்திருக்கின்றனர். பழையமுறையில் தயாரிக்கப்படும் நம் நாட்டுச் சுருட்டைப் பற்றவைப்பதற்கு மாரிக்காலத்தில் குறைந்த கணக்கு அரைப்பெட்டி நெருப்புக் குச்சுகளாவது வேண்டும். அல்லது அதனுடன் ஓர் நெருப்புக்கொள்ளியைச் சேர்த்துக் கட்டிவிடல் வேண்டும். மணமும் நல்லதாயில்லை. சுருட்டை வாயில்வைத்தவுடன் கோடா உதட்டில் ஒட்டிப்பிடித்து, சுருட்டுப் புகைத்து முடிந்த ஒரு மணித்தியாலத்தின் பின்னரும் அவ்வுதட்டின் கைப்பு மாறுகின்றிலது எனவே, நம்நாட்டு வாலிபர் இச் சுருட்டை விடுத்து சிகரற் பிடிகளை அபிமானிப்பதையிட்டு நாம் குறைசொல்லமுடியுமா?

சுருட்டுத்தொழில் முன்னைய உந்நதநிலைமைக்கு வரவேண்டுமானால், சுருட்டு ஆக்கும் தற்போதைய முறையைக் காலத்திற்கேற்றவாறு மாற்றுதல் வேண்டும் என முன்னொருமுறை கூறியதை நாம் மீண்டும் வற்புறுத்திக் கொள்ளுகிறோம். தற்காலத்து வாலிபர்க்கேற்றவிதமாகக் கோடாப்போடும் முறையை அகற்றிச் சுருட்டை நறுமணமுள்ளதாயும் நன்றாக எரியக்கூடியதாயும் அதிகம் காரமில்லாததாயும் ஆக்குதல்வேண்டும். இதற்கு இந்த யாழ்ப்பாணத்தில் உள்ள சுருட்டு முதலாளிமார் யாவரும் ஒன்று சேர்ந்து ஓர் மகாநாட்டின் மூலமாக ஆலோசிக்கவேண்டும். இது விஷயத்தில் அநுபவமுள்ள கைத்தொழில் நிபுணரின் உதவியை நாடுதல்வேண்டும் இது அவ்வளவு கஷ்டமல்ல என்பதே எமது அபிப்பிராயம். இவ்வாலோசனையைச் சுருட்டுத்தொழில் முதலாளிமார்க்கும் தொழிலாளிகளுக்கும் வியாபாரிமார்க்கும் சமர்ப்பிக்கின்றோம்.

### ஆற்று முத்து.

இலங்கையின் ஓரத்திலுள்ளசிலாபக்கடலிலேயல்லாமல் இலங்கையிலுள்ள எந்த ஆற்றிலேயினும் இற்றைவரையில் முத்துக்கண்டெடுக்கப் படவில்லை. ஆனால் சென்ற ஞாயிற்றுக்கிழமை வெள்ளவத்தையிலுள்ள விடுதிவீட்டில் கல்வர் ஒருங்கிருந்து போசனஞ்செய்யும்போது சுயம்பாகி ஒப்பியிற் சமைத்த கறியைக்கொண்டுவந்து அக்கால் வருக்கும் பரிமாறியபோது ஒருவருக்கு இடப்பட்ட கறியுள் ஒருமிளகளவு முத்துக் கிடந்து ஒளிர, அதனை அவர் எடுத்துத் தமது சகபாகருக்குக் காட்டி மகிழ்ந்தாராம். அச்சிப்பிகள் வெள்ளவத்தை யாற்றிற் பிடிக்கப்பட்டனவாம். இதனைக் கேள்விப்பட்ட அதிகாரிகள் அந்நதியிலுள்ள சிப்பிகளைப் பரிசோதிப்பித்தற்கான முயற்சி செய்கின்றார்கள்.

### வெட்கம் இல்லையா?

சீன அரசினர் தம் நாட்டிற் கல்வியின்மையைப் போக்குதற்குக் கங்கணம் கட்டிநிற்கின்றனர். சர்வகலாசங்கங்களில் பட்டங்கள்பெறவிரும்புவோர், தாம் பொதுஜனங்களிடை கல்வியின்மையைப் போக்க முயற்சிப்பதாக வாக்குத்தத்தம் செய்யவேண்டும். வர்த்தக கைத்தொழில் முதலாளிமார் ஆலைச்சொந்தக்காரர் யவரும் தம் கீழ்உள்ள தொழிலாளிகளுக்கு ஓய்வு நேரங்களிற் கல்வியூட்டுதற்கான சௌகரியங்கள் அனைத்தும் செய்யவேண்டும். இதுமாத்திரமா? 1936-ம் ஆண்டு மே மாதம் 1ம் தேதிக்குப்பின் சீனத்துமக்கள் ஒவ்வொருவரும் குறித்த ஓர் நாலிற் பரீட்சிக்கப்படுவர். இதில் தவறுபவர்களுக்கு அபராதம் விதிக்கப்படும் எனவும் ஓர் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது. இந் நிபந்தனைகளும் ஏற்பாடுகளும் சற்றுக்கண்டிப்பானவைதான். ஆனால் சீனத்தில் கல்விநிலைமையை நோக்குமளவில் இத்தகைய ஏற்பாடுகளும் நிபந்தனைகளும் இயற்றப்படவேண்டுவது ஆவசியகமே! சீனத்து அரசினர் தம் நாட்டில் கல்வியின்மையைப் போக்கக் கையாளும் முறைகளைக் கண்ணுக் கண்டபின்னரும் நமது வித்தியாபகுதியினர் முகம் நிமிர்த்துதான் இருக்கிறார்களா?

———

### வாண விபத்துக்கள்.

சுழிபுரத்தைச்சேர்ந்த வேலக்கம்பராய் அம்மன்கோவிலில் நிகழ்ந்தவாணவிபத்து அதிர்ச்சி நீங்குமுன் சென்ற செவ்வாய்க்கிழமை யிரவு வண்கிழக்கு வீரமாகாளியம்மன்கோவிலில் ஓர் வாணவிபத்து நிகழ்ந்தது என்று அறியக்கிடக்கின்றது. அதிர்ஷ்டவசமாக இவ்விபத்தில் எவர்க்காயினும் உயிர்ச்சேதம் நிகழவில்லை. தலைதப்பினது தம்பிரான் புண்ணியமாக, கால்முறிவு கைமுறிவு, மண்டையுடைவு என்பனவற்றுடன் வேடிக்கைபார்த்தவர்கள் தப்பிவிட்டனர். திருவிழாக்காலங்களில் உயிர்ச்சேதத்திற்கேதுவான வாணவேடிக்கை நிகழ்த்துதல் சாத்திரோக்தமானதா அன்று என்ற கேள்வி ஒருபுறமிருக்க இப்படியான விபத்துக்களுக்கேதுவான வாணங்கள் கொழுத்த அரசினரின் அனுமதி தேவையில்லையா என்பதே நமகேள்வியாகும். இவ்வேடிக்கைக்குப்பொலிசாரின் அநுமதியை வழக்கப்படிபெறவில்லையென்று அறிகிறோம் எமக்குக் கிடைத்துள்ள தகவல் மெய்யானால், இது மகாகுற்றமாகும் என்பதே எமது அபிப்பிராயம். தர் அதிர்ஷ்டவசமாக சென்ற செவ்வாய்க்கிழமையிரவு ஏதும் உயிர்ச்சேதம் நிகழ்ந்திருந்தால் அதற்கு யார் பொறுப்பாளி? இப்போதுதானும் கைமுறிவு, கால்முறிவு ஏற்பட்ட சிலர் அடைந்துள்ள நட்டத்திற்கு யார் ஜவாப்தாரி? வண் வீரமாகாளியம்மன் கோவிலோ நகரத்தின் மத்தியில் உள்ளது. பொலிஸ்தானத்திற்குச் சமீபமாகவுள்ளது "ஊர் ஆகாசம், கொழும்பாகாசம்" எனப்படும் ஆபத்துக்கேதுவான வாணங்கள் கொழுத்தப்படும் என்பதறிந்து யாழ்ப்பாணம் எங்கணும் உள்ள பலர் ஏற்கெனவே வேடிக்கைபார்க்க வந்திருந்தனர். ஆனால் இப்படியான ஓர் வேடிக்கை நடக்கப்போகின்றது என்பதை அவ்வூர்த் தலைமைக்காரர் அறியாதிருந்ததும் ஏனோ? அறிந்திருந்தால் பொலிசாருக்குத் தகவல் அறிவிக்காததும் ஏனோ?

### பொலிசரும் வட்டிக்காரிகளும்.

கொழும்பிலே கடகம் பெட்டிகளிற் காய்கனி முதலியன கொண்டு விற்றுத்திரியும் பெண்களை வட்டிக்காரிகளென்று சொல்வது வழக்கம் இந்த ஏழைப்பெண்கள் தெருவோரத்துள்ள மேடைகளிற் சிறிது நேரம் இருந்து காய்கனி விற்பதைப் பொலிஸர் காண்பாரேல் உடனே அவர்களைப் பிடித்துக் கொண்டுபோய் நீதிஸ்தலத்தில் ஒப்பித்துவிடுதலால், குறித்த பெண்கள் தொழிலாளர் தலைவராகிய மிஸ்ரர் குணசிங்கிக்கு முறையிட்டார்கள். மிஸ்ரர் குணசிங்கி விஷயத்தை விசாரித்த போது, மேடைகளில் இருந்து வியாபாரஞ் செய்யாத பெண்களையும் பொலிஸர் பிடித்துச் செல்கின்றனரெனவும் அவர்களுடைய காய்கனிகளெல்லாம் பறிமுதலாக்கப் படுகின்றனவெனவும் அறிந்து இந்த விவகாரங்கட்குரிய மந்திரிக்கு இதைப்பற்றித் தெரிவித்திருக்கின்றாராம்,

இந்திய அரசியற் குறிப்புகள்.

# சீக்கிய-முஸ்லீம் தகராறு.

## மசூதியை அழித்ததால் அபாயநிலை.

காங்கிரஸின் நிலைமை | அபேதவாதிகள் கண்டனம்.

மிதவாதிகள் ஒத்துழைப்பு | அரசினர்படும் அவதி.

## 5 மாகாணங்களிற் காங்கிரசிற்கு பூர்ணபலம்

(ஸ்ரீதரன் எழுதுவது)

இந்திய அரசியல் மசோதா பாராளுமன்றத்தில் நிறைவேறிவிட்டது. இனி அரச சக்கரவர்த்தியின் அங்கீகாரம் பெறுவதே தடை. புதியவிதமாக அமைக்கப்படும் மாகாணச் சட்ட சபைகளின் பொதுத் தெரிவு 1936ம் ஆண்டில் நடைபெறும் எனப் பொதுவாகச் சொல்லப்படுகிறது.

X X X

இந்திய அரசியல் மசோதா விஷயமாகக் காங்கிரஸின் கொள்கை என்ன என்பதை பிரிட்டிஷ் அரசினர் மிகவும் அவதானித்து வருகின்றனர். சட்டசபைத் தேர்தலிற் பங்கு பற்றுவதோடு மாத்திரம் அமையாது, இயலக்கூடிய மாகாணங்களில் மந்திரிப் பதவிகளையும் ஏற்று வகித்தல் வேண்டுமென்ற அபிப்பிராயம் காங்கிரஸ் வாதிகள் பலரிடையே இப்போது வெகுவாகப் பரவுகின்றது.

X X X

காங்கிரஸ் பதவிகள் ஏற்பதன் நோக்கம் என்ன? இதுசம்பந்தமாக ஸ்ரீஜூத் சத்தியமூர்த்தியின் கொள்கை வருமாறு:-

ஓர் மாகாணத்தில் காங்கிரஸ் வாதிகளே பெரும்பான்மையான ஸ்தானங்களைக் கைப்பற்றி விட்டனர் என வைத்துக்கொள்ளுவோம் எனவே மந்திரிப் பதவிகளை ஏற்கும்படி தேசாதிபதி கேட்பார். காங்கிரஸ் பதவிகளை ஏற்று, கராச்சிக் காங்கிரசில் நிறைவேறிய கட்டாயக் கல்வி, உத்தியோகமின்மையைத் தடுத்தல், மதுபான ஒழிப்பு. முதலாம் திட்டங்களைச் சட்ட பூர்வமாக அநுசரிக்கும்: மந்திரிமார் இத்திட்டங்களை அநுசரிக்கும்போது ஒன்றில் தேசாதிபதி அவற்றிற்கு உடன்படல் வேண்டும், அல்லது மந்திரிசபையையும் அதன் மூலமாகச் சட்டசபையையும் கலைத்தல் வேண்டும். இதன் பின்னரும் அம் மாகாணத்திற் காங்கிரசே அதிகாரத்திற்குவர மீண்டும் முட்டுக்கட்டை ஏற்படும். இதுவே ஸ்ரீஜூத் சத்தியமூர்த்தியின் நோக்கம்.

X X X

அபேதவாதிகள் மந்திரிப்பதவிகள் ஏற்பதற்கு மாறாக நிற்கின்றனர். ஐக்கிய மாகாணத்தில் அபேதவாதிகளே அதிகம் செல்வாக்குப் பெற்றவர்கள். இந்த ஆண்டு முடியப் பண்டிதர் ஜவஹர்லால் நேருவும் விடுதலையாய் விடுவார். அவர் ஐரோப்பாவுக்குப் போகாது இங்கேயே நிற்பாராஞல் அபேதவாதிகளின் வலிமை அதிகப்படும் என்பதற்கையமில்லை.

X X X

அடுத்த தேர்தல்கள் என்னுதும் என்பதைப்பற்றி அரசினர் சற்றுப் பயமடைகின்றனர். ஆனுல் ஒன்றுமாத்திரம் நிச்சயம். சென்னை, பம்பாய், மத்திய மாகாணம், பிகார், அஸாம், ஒறிஸா என்னும் 6 மாகாணங்களில் காங்கிரஸ் நிச்சயமான வெற்றியுறும். மற்றும் மாகாணங்களிலும் காங்கிரஸ்வாதிகளில் அநேகர் ஸ்தானங்கள் பெறுவர் அம்மாகாணங்களில் அவர்களின் தயவிலேயே மந்திரிப்பதவி வகித்திருக்கும் கட்சியினர் தங்கியிருக்கவேண்டிய நிலைமை ஏற்படும்.

X X X

லாகூரில சீக்கிய-முஸ்லீம் தகராறு ஒன்று ஏற்பட்டிருக்கிறது. அதிகாரிகளின் சாவதானத்தால் அது பெருங்கலகமாய் முடியவில்லை. சீக்கியர்கள் தமது காணிக்குள் இருக்கும் மசூதிய பகுதி ஒன்றைத் தகர்த்தெறிந்துவிட்டனர். இதுவே தகராற்றிற்குக் காரணம். இப்பிணக்கைத் தீர்ப்பதற்காக சீக்கிய தலைவர்களும் முஸ்லீம்தலைவர்களும் ஒன்றுகூடி ஆலோசித்தும் பயன் கிடைக்கவில்லை. இப்போது லாகூரில் மிகுந்த நெருக்கடியான நிலைமை ஏற்பட்டிருக்கிறது இராணுவவீரரும், பொலிஸ் படையினரும் நகரைக் காவல்காத்து வருகின்றனர்.

X X X

காங்கிரஸ் தலைவர் ராஜேந்திர பாபு அப்பாலா என்றவிடத்திலிருந்து சப்ரா என்றவிடத்துக்குப் போகையில் லக்ஷ்மணபுரியில் இரண்டுமணிநேரம் தங்கி அடுத்த காங்கிரஸின் உபசரணைச்சபை ஆலயத்தை முறைப்படி திறந்து வைத்தார். அவர் காங்கிரஸ் கூட்டம் இனிது நிறைவேறப் பலரும் உதவ வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். அகில இந்தியகாங்கிரஸ் அபேதவாதக்கட்சிப் பொதுக் காரியதரிசி வெளியிட்டுள்ள சுற்றறிக்கையைப்பற்றி அவாது அபிப்பிராயத்தைக் கேட்டபோது அவர் இப்போது ஒன்றுஞ் சொல்லமுடியாதென்றும், இனி நடக்கிற தன்ன வென்பதை நிதானித்துப் பார்க்கவேண்டுமென்றும் கூறினர். டெ இந்தியாவில் தாம் பலவிடங்களுக்குச் சென்றிருந்ததாகவும், குவெற்றாவிலிருந்து தப்பிப் பிழைத்து காயத்துடன் வந்த ஆயிரக்கணக்கானவர்களைக் கண்டதாகவும் அவர்களின் துக்ககரமான கதையையும் கேட்டதாகவும், அவர்களுக்கு நாட்டினர் தக்க உதவிசெய்வார்கள் எனத் தாம் நம்பியிருப்பதாகவும் கூறினர்.

X X X

இந்திய மசோதா 299 வது பிரிவைப் பற்றி ஸர்தார் மங்களசிங் தெரிவித்த அபிப்பிராயம் வருமாறு:—

ஒரு தற்காலிக முறையாக வகுப்புத் தீர்ப்பைப் பிரிட்டிஷ் அரசினர் சிருஷ்டித்திருக்கலாம். நியாயத்தையும் தர்மத்தையும் கடைப்பிடித்து ஒழுகுவதாகச் சொல்லிக்கொள்ளும் அரசினர் வகுப்புத்தீர்ப்பைச் சிருஷ்டித்தது சரியாகாது. பொறுப்பாட்சியும் சுயாட்சியும் நிலைபெறுவதற் செய்யும் இவ் வகுப்புத்தீர்ப்பை பலத்த எதிர்ப்புக்குப் பின்னும் மாறுதிருப்பது வருந்தற்குரியதாகும்.

நியாயமான ஒரு ஒப்பந்தமேற்படும்வரை வகுப்புத் தீர்ப்பை பெதிர்த்த கிளர்ச்சி இடைவிடாமல் நடக்கும். 299-வது பிரிவு முன்னைய பிரிவைவிட அபிவிருத்தியாகும் ஆனுல் இதைக்கண்டு முஸ்லீம்களில் ஒரு சாரார் பதட்டமடைந்திருப்பதாகக் காண்கிறது பஞ்சாபில் சீக்கியச் சிறுபான்மையோரின் நலன்கள் பாதுகாக்கப்படுமென்று அறிவிக்கவேண்டுமென விரும்புகிறேன். எல்லா வகுப்பாரும் ஒன்றுசேர்ந்து உழைத்தால்தான் மாகாணம் முன்னேறும். அரசினர் தயவை எதிர்பார்த்திருப்பதைவிட மாகாணத்திலுள்ள சிறுபான்மையோரின் நம்பிக்கையைப் பெறுதல் நலமென்று முஸ்லீம்களுக்கு நான் உணர்த்தவிரும்புகிறேன்.

X X X

புது அரசியல் சீக்கிரத்தில் வாவிருப்பதை முன்னிட்டு ஜூன் 28-ந் தேதி முதல் ஒரு வருஷத்திற்கு வங்க சட்டசபையின் ஆயுள் நீடிக்கப்பட்டிருப்பதாக வங்க அரசினர் ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளார்கள்

X X X

ஸ்ரீராமகிருஷ்ணர் நூற்றாண்டு விழா கொண்டாட்டத்துக்கு எல்லோரும் கைங்கர்யம் செய்ததாகவிருக்க வேண்டுமென்பதற்காக ஒரு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஸ்ரீராமகிருஷ்ணரின் படத்துடன் கூடிய சீட்டுக்கள் ஒன்று தயாரிக்கப்பட்டு அது ஒரு அணுவுக்கு விற்கப்படும்.

நூற்றாண்டு விழாப் பிரசுரத்தை சீக்கிரத்தில் வெளியிடவும் ஏற்பாடு நடந்துவருகிறது. அதன் விலை 18 ரூபாய். ஆனுல் முன்னதாக ஆர்டர் கொடுப்போர் அதை 12 ரூபாய்க்குப் பெறலாம்.

---

### மரணக்கனவு மெய்யாகிவிட்டது.

ஜயம்பேட்டைக்கு அருகாமையிலுள்ள கிராமமொன்றில் சென்ற வியாழக்கிழமையன்று ஓர் ஆச்சர்யமான சம்பவம் நிகழ்ந்தது. அந்தக் கிராமத்து வாசியான ஒரு மாது சிலநாட்களுக்கு முன் பயங்கரமானதோர் கனவைக் கண்டுவிட்டு "நானும், என் வீட்டில் வசிக்கும் மற்றோர் பெண்ணும் வருகிற வியாழக்கிழமையன்று மரணமடைந்து விடுவோம். அப்படிப்பட்டதோர் கனவை நான் கண்டேன்!" என்று கூறினளாம். அவளைப் பித்தம் பிடித்தவளென்று எல்லோரும் பரிகாசம் செய்தார்களாம்.

ஆனுல் அவளுடைய கனவு முடிவில் முற்றிலும் மெய்யாகிவிட்டது. சென்ற 20ந் தேதி வியாழக்கிழமையன்று அந்த மாதும் அவளுடைய வீட்டில் வசித்து வந்த மற்றோர்மாதும் மரணமடைந்துவிட்டார்கள்.

உலக அரசியற் போக்கு

# சமாதானப்பேச்சு முறிந்தது.

## இத்தலிய சர்வாதிகாரியின் யுத்தவெறி.

—:*:—

அபிசீனியா ஓலம் | பிரான்சின் போலிநியாயம்.

அமெரிக்காவின் நிலைமை | பிரிட்டனுடைய கோபம்?

## ஜப்பானுக்கு ஓர் வாய்ப்பான சமையம்.

(அரசியல்வாதி எழுதுவது.)

நாம் கறுப்பர்களை வென்று வந்திருக்கிறோம்; இனியும் வெல்வோம் என்று சென்ற சனிக்கிழமை இத்தாலியச் சர்வாதிகாரியான முசோலினி கூறிய மொழிகள், தற்போதுள்ள இற்றலிய—அபிஸீனியப்பிணக்குத்தீர உதவிசெய்யாது என்பதே எல்லோரதும் அபிப்பிராயமாகும். முசோலினியின் பேச்சு எரியும் கொள்ளியை எறத் தள்ளுவதுபோலாகும் தற்போது இற்றலிய—அபிஸீனிய பிணக்குத் தீர வழியில்லையா! ஆனுல் அந்த வழியைப் பின்பற்ற முசோலினிக்கு விருப்பில்லை.

ஃ ஃ ஃ

நாம் பிழை செய்தால், அப் பிழையை விசாரித்து, நாம் குற்றவாளிகளானுல் அதற்கான அபராதத்தை இறுக்கத் தயார் என்று அபிஸீனிய அரசினர் கூறுகின்றனர். இதற்கு இற்றலி இணங்கத் தயங்குகின்றது. அபிஸீனியாவின் செழிப்புவாய்ந்த நிலங்களைக் கொள்ளையடிப்பதே இற்றலியின் நோக்கமாயிருக்கிறது.

ஃ ஃ ஃ

அபிஸீனியா அமெரிக்காவிற்கு ஓர் மநு அனுப்பியதென்று சென்ற பிரசுரத்திற் குறிப்பிட்டிருந்தேன். இத்தலிய—அபிஸீனியப் பிணக்கைத் தீர்த்துவைப்பதில் தனக்கு உதவிபுரியுமாறு அபிஸீனியா அமெரிக்காவைக் கேட்டுக்கொண்டது. அவ் வேண்டுகோளை அமெரிக்கா நிராகரித்துவிட்டதுமன்றி அபிஸீனியாவில் உள்ள அமெரிக்க பிரஜைகளைப் பாதுகாத்தற்கான வழிவகைகளைக் கையாளுமாறு அபிஸீனியாவில் உள்ள அமெரிக்க ஸ்தானிகருக்கு உத்தரவிட்டிருக்கிறது ஆரோ செத்தால் ஏனோ அழுவான் என்ற நிலைமையில் அமெரிக்கா இதுவிஷயத்தில் நிற்பது இற்றலிக்கு அஞ்சியே என அரசியல் வாதிகள் அபிப்பிராயமுறுகின்றனர்.

ஃ ஃ ஃ

அமெரிக்கா மாத்திரம் இற்றலிக்கு அஞ்சவில்லை. இற்றலி அபிஸீனியாவைக் கொள்ளையடிப்பதைத் தடுக்க வேண்டும். அன்றேல் சீன விஷயத்தில் ஜப்பான் புரிந்த அக்கிரமங்கள் தோன்றும் எனப் பிரிட்டிஷ் பாராளுமன்றத்திற் பல அங்கத்தவர்கள் கூறியமை ஞாபகமிருக்கலாம் இத்தலி— அபிஸீனியப் பிணக்கை ஒருவாறு சமரசமாகத் தீர்த்துவிடுதற்கு இங்கிலாந்து தன்னாலானமட்டும் முயற்சி செய்கின்றது என்பதை எவரும் ஒத்துக்கொள்ளவேண்டும். ஆனுல் அதன் முயற்சி ஏகாதிபத்திய வெறி பிடித்த முசோலினி விஷயத்தில் சித்தி எய்துமோ என்பது சந்தேகமே! பிரிட்டிஷாரின் கொள்கைக்கு நேர்விரோதமான கொள்கையை பிரான்ஸிய அரசினர்கொண்டிருக்கின்றனர் என்பது தெரிகிறது.

ஃ ஃ ஃ

"இற்றலி சர்வதேசசங்கத்தை விட்டு விலக வொண்ணுது. விலகினுல் அச் சங்கம் அழிந்தொழிந்துவிடும். சங்கத்தைப் பாதுகாக்கவேண்டியது எமது கடனுகும். எனவே இதுவிஷயத்தில், அதாவது இற்றலியைக் கண்டிக்கும் விஷயத்தில் நாம் மிகச் சாக்கிரதையாக நடக்கவேண்டும் பிரிட்டிஷ் மந்திரசபையினர் ஏனைய வல்லரசுகளை இதுவிஷயத்தில் உசாவவில்லை. ஜெர்மனியுடன் கடற்படைச் சமாசம் செய்தபோதும் வெர்ஸெயில்ஸ் உடன்படிக்கைக்குக் கைபெப்பமிட்ட ஏனைய வல்லரசுகளுடன் கலந்தாலோசிக்கவில்லை" என்று பிரான்ஸின் செல்வாக்குள்ள பத்திரிகை "தெப்ப்ஸ் கூறுகிறது.

ஃ ஃ ஃ

சீனச் சேனுதிபதியான சுங்கொஷ்யானின் படைகள் மஞ்சூரியா எல்லைப்புறத்தைத்தாக்கி இருகாவலாளிகளுக்குப் பலத்த காயமுண்டுபண்ணியிருப்பதாக ஓர் செய்தி கூறுகிறது. இதன் பயனுக 100 வீரரைக் கொண்ட ஜப்பானியப்படை ஒன்று ஜெஹோல் எல்லைப்புறத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறது. எப்போது தருணம்வரும் சீனத்தைக் கைப்பற்றலாம என்று அவாவுடன் நிற்கும் ஜப்பானிய அரசினர்க்கு இது ஓர்வாய்ப்பான சந்தர்ப்பமாய் விட்டது.

ஃ ஃ ஃ

இவ்வாரத்திறுதியிற் கூட்டப்படும் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில், பிரிட்டிஷ் ஆகாயப்படையை அதிகரிப்பதற்காக 50லட்சம் பவுன்கள் உபமானியம் கேட்கப்படும். இத்திட்டத்தைப்பற்றிய முழுவிவரமும் கூடிய சீக்கிரத்தில் பிரிட்டிஷ் அரசினரால் வெளியிடப்படும் என்று சென்ற 4-7-35 இல் மிஸ்டர் ரூம்சே மக்டோனல்டு நிகழ்த்திய ஓர் ஒலிபரப்புப் பிரசங்கத்திற் குறிப்பிட்டார்.

ஃ ஃ ஃ

இற்றலிய—அபிஸீனியப் பிணக்கைச் சமரசமாகத் தீர்த்துவைப்பதற்கென நியமிக்கப்பட்ட விசாரணைச்சபை இப்போதுள்ள நிலையில் சமரசம் ஏற்படாது என்ற எண்ணத்தினுற்போலும் விசாரணைபுரிவதை நிறுத்திக்கொண்டது என இன்றுவந்த செய்தியொன்று கூறுகிறது.

ஃ ஃ ஃ

இற்றலிக்கும் அபிஸீனியாவுக்குமிடையே சமாதானம் உண்டாக்க ஜப்பானியச் சக்கரவர்த்தி முயற்சி செய்கின்றுர் என்று ரியூற்றர்ற் செய்தி ஒன்று கூறுகிறது.

---

### பருத்தித்துறையில் துப்பாக்கிச்சூடு

பருத்தித்துறையிற் சென்ற செவ்வாய்க்கிழமை சோமன் என்னும் ஒருவன் வடிவேலு என்னும் மலாய்நாட்டு உத்தியோகத்தாற் சுட்டுக்கொல்லப்பட்டான் என்று ஓர் செய்தி எட்டுகிறது.

---

### கிராமச்சங்கத் தலைவர் தெரிவு

காரைநகர்.

காரைநகர் கிராமச்சங்கத்துத் தலைவராக பிறக்டர் ஸ்ரீ A. கனகசபை அவர்கள்தெரிவு செய்யப்பட்டார்.

வேலணை.

வேலணைக் கிராமச்சங்கத்துத் தலைவராக ஸ்ரீ C. பாலசிங்கம் அவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறுர்.

---

### வழிமறித்துக் கொள்ளையடித்ததாக

கல்வியங்காட்டைச் சேர்ந்த செல்லம்மா என்னும் காய்பிஞ்சு வியாபாரி தெருவாற் செல்லும்போது, ஆ. கந்தையா என்பவன் வழிமறித்து அவளிடமிருந்த 12 ரூபாவையும் பறித்தான் என்ற குற்றச்சாட்டப்பட்ட வழக்கில் சென்ற செவ்வாய்க்கிழமையன்று எதிரி நிரபராதியெனக் கண்டு விடுதலைசெய்யப்பட்டான்.

---

### குருபூசை.

நிகழும் யுவ யாண்டு ஆனித் திங்கள் உக-ம் நாள் (5-7—35) வெள்ளிக்கிழமை மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலையில் மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசை மிகவுஞ் சிறப்பாக நடத்தப்பட்டது. அத்தருணம் சிவஞானச் செல்வர், பண்டிதர் ஸ்ரீமான் பொன்னம்பலபிள்ளை அவர்கள், சுவாமிகளுடைய சீரிய வரலாற்றையும் அற்புதச் செயல்களையும் சமயத்தொண்டையும் ஒப்புயர்வில் பெருமையையும் எடுத்துரைத்தார். பின்னர் ஷை வித்தியாசாலைத் தலைமையாசிரியர் பண்டிதர் திரு. கா. பொ. இரத்தினம் அவர்கள் குறிப்புரை கூறினர்.

---

### உதைபந்தாட்டத்தில் யாழ்ப்பாணம் பொலிசிற்குவெற்றி.

நேற்றுப்பின்னேரம் பதுளையில் இருந்து வந்த பொலிஸ் உதைபந்தாட்டக் கோஷ்டியினர்க்குமிடையே நிகழ்ந்த உதைபந்தாட்டத்தில் யாழ்ப்பாணம் பொலிஸ கோஷ்டியினரே வெற்றியடைந்தனர்.

# உடல் இரண்டு உயிர் ஒன்று!

## நஞ்சுண்டிறந்த காதலரின் இறுதிக்கடிதங்கள்.

### அழியும் பிணங்களையாவது அணையுங்கள்! அடுத்தபிறவியிலாவது ஆநந்தம் பெறுவோம்!

தென்னிந்தியாவைச் சேர்ந்த வேலூரில் இற்றைக்குச் சின்னாட்களுக்குமுன் நிகழ்ந்த கஜராஜன் —சரோஜா காதல் வைபவத்தைப் பற்றி ஏற்கெனவே இப்பத்திரிகையில் வெளியிட்டுள்ளோம். இப்போது கஜராஜன் தான் இறக்கும்போது தன் பெற்றோர், உற்றார்க்கு எழுதிவைத்துள்ள கடிதங்கள் கிடைத்திருக்கின்றன.

தன் தந்தைக்குக் கஜராஜன் பின்வருமாறு எழுதியிருக்கிறான்:—

"எந்தாய்! நான் என் உள்ளத்தைக் கொள்ளைகொண்ட சரோஜாவையே விவாகம் செய்யவேண்டும் என்று தங்களைப் பன்முறை கேட்டேன், இரந்தேன், அழுதேன், மன்றாடினேன்; ஆனால் எனது வேண்டுகோள்கள் யாவும் பயனற்றதாய் விட்டன. உண்மைக்காதல் எத்தன்மைத்து என்பதை இந்த உலகம் அறிகிறதில்லை. ஆனால் இந்த உலகத்தால் என்னையும் சரோஜாவையும் பிரிக்கமுடியுமோ? ஒருபோதும்முடியாது:இருவர்க்கும் உடல்கள் இரண்டு: ஆனால் உயிர் ஒன்றே! தந்தாய், இதனைத்தாங்கள் உணராதுவிட்டீர்களே! ஆனால் அதன்பயனைக் கண்டு மனம்வருந்தவேண்டாம்.

தன் தாய்க்குக் கஜராஜன் பின்வரும் கருத்துக்கண்ட கடிதத்தை எழுதி வைத்தான்:—

அன்னையே! நானும் என் காதற்கிளி சரோஜாவும், நீ இக்கடிதம் காணும் போது, விண்ணகத்தே ஒருமித்துச் சேர்ந்து இன்பமனுபவிப்போம். சரோஜா என்னைக்காதலிக்கவில்லை என நீ எண்ணியிருக்கலாம். ஆனால் இதனைப் படிக்கும்போது நீ கொண்ட எண்ணம் பிழையானது: சரோஜா மாசற்றவள்: காதற்கிளி: காதற்களஞ்சியம் என்பதனை நன்கு உணர்வாய்:"

தன் நண்பர்களுக்கும் மற்றவர்களுக்கும் பொதுவாகக் கஜராஜன் பின்வரும் கருத்துக் கொண்ட கடிதத்தை எழுதி வைத்திருந்தான்:—

"என் உடலையும், சரோஜாவின் உடலையும் ஒன்றாய்ப்புதைத்துவிடுங்கள்: உயிருடன்தான் நாமிருவரும் ஒன்றுசேரப் பாக்கியம் செய்யவில்லை: இறந்தபின்னர் மண்ணோடு மண்ணாய்ச்சேரும் எமது பிணங்களையாவது ஒன்றுசேர்த்து விடுங்கள். நாம் இருவரும் இம்மையில் சந்தோஷமாயிருப்போம் என்று எண்ணியிருந்தேம். ஆனால் விதியின் வயத்தால் அது கைகூடப்பெறவில்லை. நாம் வாழ்க்கையில் அலுத்து நஞ்சுண்டிறக்கத் துணிந்துகொண்டோம்.

சரோஜாவின் பெற்றோர்க்கும் கஜராஜன் ஓர் கடிதம் வைத்தான்.

"நாங்கள் இறக்கப் போகின்றேம். உயிர் நீங்கிய உடல்களையும் நீங்களாவது என் பெற்றோராவது பிரிக்க வேண்டாம் இதுவே தங்கள் எல்லோரையும் இதோ இறக்கப்போகும் நான் கேட்டுக்கொள்வது!"

என்று அக்கடிதத்திற் குறிப்பிடப்பட்டிருந்தது.

# உலகம் பலவிதம்.

(முற்றொடர்.)

"இனி இதைப்பற்றி வராது" என்று ஸ்ரீ கைலாசபிள்ளையவர்கள் இறுதிக் கடிதத்திற் குறிப்பிட்டிருந்தலால், அவர் கேட்ட கேள்விகளுக்குப் பதில் எழுதிவிட்டு அவ்வளவில் இவ்விவாதத்தைவிட்டு எழுதாது விடுகின்றேன. பிள்ளையவர்கள் என்னை விழித்து "நான் ஆராய்ச்சி முறைகளில் இப்போது வருந் தவறுகளைச் சொல்ல வந்தேனன்றி, உமது பத்திராதிபரைக் குற்றங்கூற வரவில்லை" என்று வரைகின்றார். நமது பத்திராதிபரும் நானும் பிள்ளையவர்களை சுமத்திய அபராதங்களுக்குச் சமாதானஞ் சொல்ல வந்தோமேயல்லாமல், பிள்ளையவர்களை எவ்வாற்றானும் அவமதித்துக் குறைகூறப் புறப்பட்டிலேம். ஆனால் அப்படி வந்தவிடத்து இருபகுதியார்க்குமிடையே இப்படி முடிந்தமை இரங்கற்பாலது

X X X

நாவலரவர்கள் எழுதிய சூசனம் மாசிமுத்து உபாத்தியாயர் எழுதியதாகப் பத்திரிகையில் இப்பத்திராசிரியர் காலத்து வெளிவந்ததைப் பத்திராசிரியராவது நானாவது மறுக்கவில்லையே! திருக்கேதீச்சரத் திருப்பணி ஸ்ரீபசுபதிச்செட்டியாரவர்களால் தொடங்கப்பட்டதென இந்துசாதனப் பத்திரிகையில் யாண்டும் வெளிவரவில்லையே; மேற்படி செட்டியாரவர்களும் அத்திருப்பணி விஷயத்தில் ஈடுபட்டு உழைத்தாரென்பதைத்தானே பன்முறையும் பத்திராசிரியரும் நானும் பகர்ந்துள்ளேம்.

X X X

"தின நியமம்" என்பது 'தினநியமனம்' என முதற் பிரசுரத்திலே தவறாக வெளிவந்து விட்டமையைக் கண்டு, அடுத்த பிரசுரத்தில் அது திருத்தப்பட்டிருக்கின்றதே! அப்படியிருப்பவும் திருத்தப்பட்ட பிழையில் அழுத்தி நிற்பது சிறப்பல்லவே! பிள்ளையவர்கட்குப் பிழை புலப்படுவதன்றித் திருத்தம் புலப்படாதகதேனே? இனி "நியமனம்" எனனுஞ் சொல்லிற்கு ஏற்பாடு என்ற ஒரு பொருளும் உண்டு. இதற்குப் பிரமாணம் சிவஞானசித்தியார் சிவாக்கிரயோகிகள் உரையிற் காணலாம். இந்த நியாயத்தினாற்போலும் முதற் பிரசுரத்தில் அந்தப்பிழை புலப்படாதொழிந்தது. நாவலரையா தினநியமம் என்றே எழுதியுள்ளார். குறித்த தினநியமம் நாவலரையாவின் கையெழுத்தோ அன்றோ என்ற சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்வதற்குச் சிறந்த வழி இலங்கை அரசினர் கையெழுத்து நிபுணரிடம், கையெழுத்துப் பிரதிகளை அனுப்பி அவர் வாயிலாக உண்மையை அறிந்து கொள்ளலேயாகும். அதனால் வருஞ் செலவை நாங்கள் ஏற்றுக் கொள்ள ஆயத்தமாயிருக்கிறேம்

X X X

"வித்தியாசாலைத் தருமத்தைக் கெடுத்தது நான் மாத்திரமன்று" வேறும் இன்னின்னார் அதிற் சம்பந்தப்பட்டிருந்தார்கள் என்று சொல்வதினால் தருமங் கெடவில்லையென்பது பெறப்படுமோ? 'தரும விரோதி" என்று நான் எழுதியிருப்ப, பிள்ளையவர்கள் தாமாகவே தம்மைத் தருமத் துரோகி என மாற்றிக் கொண்டதேனோ?

X X X

ஒரு சுவாமியார்மேல் நாவலரையா பாடியதென வெளியிடப் பட்ட பாட்டைப் பிள்ளையவர்கள் மறுத்த விஷயத்தில், நாவலரையா நரரைப் பாடுவதில்லையென்ற கொள்கையினாற் பிள்ளையவர்கள் இங்ஙனம் மறுக்கின்றனர் போலுமென்றெண்ணியே ஐயா அவர்கள் சுப்பிரமணியபிள்ளைமேற் பாடியுள்ளார்கள் என்றேன். பிள்ளையவர்களே அதனை ஒத்துக் கொள்ளும் பட்சத்தில் நான் எடுத்துக் காட்டியது மிகையாகும். "சுப்பிரமணியபிள்ளைமேற் பாடியதை நானே சரித்திரத்திற் சொல்லியிருக்கிறேன்" எனப் பிள்ளையவர்கள் சாதிக்கின்றார். நாவலரையா சுப்பிரமணியபிள்ளைமேற பாடியதாகப் பிள்ளையவர்கள் சரித்திரத்திற் சொல்லியிருப்பக் காணேனே!

## மீன்கடைக்கு முன்னால் அடிபிடி.

முருகேசு சின்னத்தம்பி என்பவன் யாழ்ப்பாணம் மீன்கடையில் மீன்வாங்கக் காத்துநின்றபோது, சங்கானை வாசியான கணபதி என்பவன் அவனை அடித்தான் என்ற வழக்கு சென்ற செவ்வாய்க்கிழமை விசாரணை செய்யப்பட்டுத் தவணையிடப்பட்டது.

# மந்துவில்வாசியின் பரிதாபமரணம்.

## புகையிரத விபத்தால் உடன்சாவு

## பட்டகாலிலேபடும் கெட்டகுடியே கெடும்.

(நமது நிருபர்)

மந்துவில் வாசியான சடையர் செல்லையா என்பவர் சென்ற செவ்வாய்க்கிழமை பின்னேரம் சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்குமுன்னால் புகையிரதப்பாதையில் புகையிரதத்தால் தாக்கி எறிந்து கொல்லப்பட்டார். குறித்த செல்லையா புகையிரதப்பாதைக்கு அருகேயுள்ள கடையொன்றில் வெற்றிலை வாங்கி அருந்திவிட்டு புகையிரதப் பாதைக்கப்பால் உள்ள வளவில் மாடுபார்க்கும் நோக்கமாகச் புகையிரதப்பாதையைக் கடந்து செல்கையில் பளையில் இருந்து 4-மணியளவில் வந்த புகையிரதம் அவர்மீது மோதி அப்படியே அவரை வாரியெறிந்தது. உடனே அவரது என்புகளும் மண்டையும் நொருங்கின. புகையிரத "கார்டு" ரதத்தை நிற்பாட்டி, ஆஸ்பத்திரி டக்ரரை அழைப்பித்தனர் எவ்வித முதல் உதவிசெய்தும் செல்லையா மாணம் எய்தினர்.

நேற்றுக்காலையே பிரேத விசாரணை நிகழ்ந்தது.

மேற்படி செல்லையாவின் வயசு ஏறக்குறைய 30. இவர்க்கு 3 பிள்ளைகள் உளர் இவரின் மனைவி சென்ற ஆண்டில் படுத்த படுக்கையில் நாகம் தீண்டி இறந்தவராகும். என்னே! விதியின்பயன்! கெட்ட குடியே கெடும்! பட்டகாலிலே படும்!

## செம்மாதெரு லட்சுமியின் கத்திவெட்டு.

### வண்ணானுடன் கொண்டாட்டம் அதனால்வந்த வினை?

### எதிரிக்கு 15 ரூபா அபராதம்.

(நமது நிருபர்)

யாழ்ப்பாணம் செம்மாதெருவில் வசிக்கும் பேதுரு அலிஸ் என்பவனின் மனைவியான லட்சுமி என்பவள் தனது கணவனைக்கத்தியால் வெட்டினுள் என்ற வழக்குச் சென்ற செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் பொலிஸ் நீதிஸ்தலத்தில் விசாரணைசெய்யப்பட்டது.

மேடி லக்ஷுமி என்பவள் ஓர் வண்ணானுடன் சோரநட்புப் பூண்டிருந்ததாகவும், ஒருநாள் வண்ணான் அடிக்கடி வருவதை மேடி பேதுரு கண்டித்துத் தன மனைவியைப் பயமுறுத்தியதாகவும், அதனைச் சகியாத அவள் ஓர்கத்தியை எடுத்துப் புறப்பக்கத்தினால் அடிக்க, அவன் தடுத்ததாகவும், பின்னர் அவள் கூர்ப்பக்கத்தினால் ஓங்க, பேதுரு அவளின் கத்தியைப்பிடிக்க அது அவன் உள்ளங்கையில் ஊறு உண்டாக்கியதாகவும் வழக்கு விசாரணையில் கூறப்பட்டது.

நீதிபதி விசாரணையின்பின் எதிரியைக் குற்றவாளியெனக்கண்டு அவளுக்கு 15 ரூபா அபராதம் விதித்து 6மாத நன்னடத்தைப் பிணையில் விடுதலைசெய்தார்.

## அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

1893-ம் ஆண்டின் 8ம் இலக்கச் சட்டத்தின்படி லைசென்சுபெற்ற அடைவுபிடிக்கும் கொட்டடி மா. கு. தெண்டாயுதபாணி என்பவரிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி மேற்படி சட்டத்தின் 12 ம்பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்.

| இல. | திகதி | ரூபா. | ச. | |
|---|---|---|---|---|
| J 2089 | 29 | 300 | | S P கந்தையா ஆனைப்பந்தியடி இரண்டுபட்டு அறுணக்கொடி 1 |
| | மே மீ 1934 | | | |
| 2893 | 3 | 7 | | க முத்துப்பிள்ளை கொட்டடி குப்பிக்கடுக்கன் 2 |
| 2924 | 5 | 10 | | ம மனுவல் நாவாந்துறை கல்தோடு 2 |
| 2964 | 7 | 94 | 50 | சி கந்தவனம் மண்டதீவு பொன் கொடி 1 |
| 3056 | 12 | 8 | | மு மு அப்துல கரீம் சோனகதெரு அறுக்குத்து 6 |
| 3114 | 16 | 25 | | அ மூசம்மது வெவ்வை சோனகதெரு அறுக்குத்து 1 குச்சு 3 காப்பு 1 மணிக்கோர்வை 2 |
| 3189 | 18 | 10 | | மு செயினுமுகம்மது சோனகதெரு அறுக்குத்து 6 |
| 3291 | 22 | 15 | | தி நட்சேத்திரம் நாவாந்துறை குப்பிக்கடுக்கன் காது |
| 3135 | 28 | 7 | | இ ஆறுமுகம் நீராவியடி மோதிரம் 1 |
| 3456 | 29 | 9 | | மு பொம்பலம் கொட்டடி மோதிரம் 1 |
| 3510 | 31 | 15 | | வா மு அபூபக்கர் சோனகதெரு கல்மோதிரம் 1 |
| | ஜூன் மீ 1934 | | | |
| 3619 | 5 | 50 | | வே இராமலிங்கம் சுவாமி இருகாப்பு 4 |
| 3667 | 6 | 500 | 03 | ச சபாரெத்தினம் தெல்லிப்பழை பெரிய பதக்கத்துடன் சங்கிலி 1 வயிரக்கல் [தோடு 2 |
| 3688 | 6 | 12 | | மு வேலுப்பிள்ளை மயிலிட்டி அச்சரக்கூடு 1 |
| 37-0 | 7 | 30 | | மீ மீராமுகைதீன் சோனகதெரு மூன்றுபட்டு மணிக்கோர்வை 1 |
| 3736 | 9 | 128 | | L P இராசசூரியர் மானிப்பாய் பெண்டனுடன் சங்கிலி 1 |
| 3758 | 10 | 330 | | கு முருகேசு புங்குடுதீவு அச்சாச் சங்கிலி 1 அச்சுக்காப்பு 4 செ காப்பு 2 |
| 3793 | 11 | 18 | | S M சுல்தான் முகைதீன் சோனகதெரு மணிக்கோர்வை 1 |
| 3861 | 14 | 125 | | L P இராசசூரியர் மானிப்பாய் கல் அட்டியல் 1 |
| 3862 | 14 | 20 | | நீ யக்கோ நாவாந்துறை அரக்குடன்கூடு 1 |
| 3878 | 15 | 87 | 18 | செ நாகலிங்கம் கச்சேரியடி செ கொலிசு 2 |
| 3986 | 21 | 12 | | இ தம்பிமுத்து பூனகரி தோடு 2 குப்பி 2 |
| 4004 | 23 | 12 | | க கணபதிப்பு கொட்டடி கல்தோடு 2 |
| 4005 | 23 | 18 | | க முத்துப்பிள்ளை கொட்டடி குப்பிக்கடுக்கன் 2 சட்டுமணி 1 |
| 4008 | 23 | 10 | 50 | மோ அன்னமுத்து நாவாந்துறை சங்கிலி 1 |
| 4036 | 24 | 7 | | சு பொன்னையா வண்மேற்கு கல்குச்சு 2 |
| 4052 | 25 | 80 | | கா கந்தையா மண்டதீவு செ காப்பு 2 |
| 4085 | 25 | 45 | | சி சதாசிவம் மண்டதீவு செ காப்பு 2 |
| 4164 | 29 | 10 | | S Joseph இளவாலை மோதிரம் 3 |
| 4197 | 30 | 13 | | கா காசிநாதர் மண்டதீவு வைத்தோர் 1 |
| 4198 | 30 | 6 | | கா காசிநாதர் மண்டதீவு கல்குச்சு 2 |
| | ஜூலாய் மீ 1934 | | | |
| 4257 | 2 | 30 | | க மீருலெவ்வை மரக்காயர் சோனகதெரு பூரான் அட்டியல் 1 |
| 4272 | 3 | 12 | | அ செல்வராசா நாவாந்துறை கல்தோடு 2 |
| 4275 | 3 | 36 | | L P இராசசூரியர் மானிப்பாய் பெண்டன் 1 |
| 4282 | 3 | 6 | | மீ மூகம்மது சோனகதெரு கொப்பு 2 பின்கோக்சு 1 |
| 4283 | 3 | 100 | | M M மதார சோனகதெரு வேலைசெய்த முழுடலர் 1 |

விற்பனவு புலவருஷம் ஆடிமீ 15-உ (30-7-35) செவ்வாய்க்கிழமை 8 மணி தொடக்கம் மேற்பட்ட நகை பிறகேலாக மீதுதி மேற்படி கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

சி. ஐயம்பிள்ளை உடையார்,
வெந்தீஸ் மேஸ்தர்.

1 98 11 15 7-35)

## பிரபலஸ்தர்க்குக் கடிதம்.

("வாலவன்" எழுதுவது.)

மானிப்பாய் கிறீன் ஞாபக வைத்திய சாலைப் பிரதம டக்டர்

**Wm. J. ஜேம்ஸன் M. D.**

அவர்களுக்கு:—

அன்புமிக்க ஐயா,

மனுஷ சேவையே பகவத் சேவை என்று அக்காட் கிறிஸ்துநாதர் அருளிப் போந்த உண்மையினை அகத்துட்கொண்டு தங்கள் ஜென்மபூமியை விடுத்து இந்த யாழ்ப்பாணத்திற்கு வந்து எமமவருள் ஒருவராய் எமது நன்மை தீமைகளிற் பங்குபற்றி, முதற் கடவுள் இரண்டாவது தாங்களே துணையென்று நம்பித் தங்கள் ஆருயிரைத் தங்களிடமே அடைக்கலம் வைக்கும் நோயாளிகளுக்கு "மருந்தாகவு மகிழுக்கால்" என்றுங்கு இன்மொழிகூறி ஊழியம் புரிந்துவராநிற்கும் தாங்கள் இன்னும் பல்லாண்டுகளுக்கு இவ்யாழ்ப்பாணத்தில் இந்த பகவத் சேவைபுரிய வேண்டுமென்பதே என்போன்ற பலரது மனப் பூர்வமான அவாவாகும். தாங்களும் தங்கள் சகாவான டக்டர் சாக்கோ அவர்களும் ஷை வைத்தியசாலையின் பொறுப்பைக் கையேற்ற காட்டொட்டு இற்றை வரை அது அடைந்து வரும் முன்னேற்றம் இந்த இலங்கை முழுவதும் நன்கு அறியப்பட்டதாகும். தங்கள் திறமையையும் குணசீலத்தையும் அறிந்தும் கேள்விப்பட்டுமுள்ள பல நோயாளிகள் தினந்தோறும் உங்கே நூற்றுக் கணக்கில் வருகிறார்கள். ஆனால் அவர்களை வைத்துச் சிகிச்சை செய்யப் போதிய இடவசதியில்லாமையால், அவர்கள் கேவலம் ஆடுமாடுகள் போலக் கண்ட கண்ட இடங்களிலும் அடைக்கப் படுகின்றார்கள் என்று அறிகிறேன். இக்குறையை நிவிர்த்தி செய்வது தங்களால் முடியும் என்பதே எனது திடமான நம்பிக்கையாகும்.

நிற்க,

ஓர் வைத்தியசாலை, அது யாரால் வைத்து நடத்தப் படுவதாயினுஞ்சரி, குறித்த சில கட்டுப்பாடுகளுக் கமைந்து நடக்க வேண்டும் என்பதையும், எக்காரணங் கொண்டோ இப்போது சிலகாலமாக ஷை வைத்தியசாலையில் இக்கட்டுப்பாடுகள் கைநழுவப்பட்டுவிட்டன வென்பதையும் தாங்களே ஒத்துக் கொள்ளுவீர்கள். சிகிச்சைக்கு வருபவர்களுடன் தொடர்பில்லாத, விரும்பத்தகாத, சிலர் உங்கே அபளி செய்ய ஆரம்பித்திருக்கின்றனராம். இவர்கள் உங்கே — கன்னியரான நேர்ஸுமார் தம் மகத்தான கடமையை ஆற்றும் இடத்தில் — பிரசவத்திறகாகவும் வைத்திய சிகிச்சைக் காகவும், பெண் மணிகள் வரும் இடத்தில் — நடமாடுதல் தங்கள் உந்நத ஸ்தாபனத்திற்கே இழுக்கைத் தருவதாகும். இவ் விரும்பத் தகாதவர்களில் சிலர் உங்கு வந்து ஒட்டி நின்று பார்ப்பாரும், ஒளித்து நின்று பார்ப்பாரும், குட்டிச் சுவராலே குனிந்து நின்று பார்ப்போருமாயிருக் கின்றனராம். இவர்களின் அக்கிரமங்களை அதிகாரத்துடனும் சாதுரியத்துடனும் ஒழிப்பது தங்கள் மேற் பொறுத்துள்ள முதற் கடமையாகும்.

இனி,

இரவில் ஆஸ்பத்திரிக் "கேற்ற"க்கள் பூட்டப்படாமலிருப்பதையும் தங்களுக்கு அறிவிக்க விரும்புகிறேன் உங்குள்ளவர்கள் யாவரும் ஒழுக்கமுடையவர்களாயிருக்கலாம்: நேர்ஸுமார் கற்பொழுக்கம் உள்ளவர்கள் கனவொழுக்கம் இல்லாதவர்கள் என்று யாரும் கூறினால் அதனை யான் மறுப்பதில்லை. ஆனால் இப்படி இரவிற் "கேற்ற"க்கள் பூட்டப்படாமையை நோக்கிய மற்றவர்கள் — விஷயமுணராதவர்கள் — விபரீதமான எண்ணம் கொள்ளார்களா? அதனால் தங்கள் உந்நதமான இந்த ஸ்தாபனத்தின் நற்பெயர் மங்காதா? இவற்றைப் பொது ஜன நன்மையையும், வைத்திய சாலையின் நன்மையையும் கருதித் தங்கள் மீது கொண்டுள்ள மதிப்பினாலேயே எழுதுகின்றேன்.

இங்ஙனம்,

தங்களன்பன்,

"வாலவன்"

— —

அரசாங்க சபைக்கு ஊர்காவற்றுறைத் தொகுதியிலிருந்து பிரதிநிதியாகச் செல்ல அபேட்சிப்பவரும், சாவகச்சேரிச் சின்னத்தம்பி ஞாபக ஆசிரியகலாசாலை ஆசிரியருமான,

**மிஸ்டர் J. C. அமரசிங்கம் B. A.**

அவர்களுக்கு:—

ஐயா,

சென்ற ஆண்டு நடந்த உபதேர்தலில் தாங்களே வெற்றியுறல் வேண்டுமென அவாவுற்றிருந்தவர்களில் யானும் ஒருவன் என்பதைத் தங்களுக்கு ஆரம்பத்திலேயே சமர்ப்பிக்க ஆசைப்படுகின்றேன். எமது பழைய கிழவனார் மிஸ்டர் கெவின்ஸ் அவர்களைப்போலத் தங்களுக்கு இராஜ விசுவாசப் பல்லவியைப் பாடத் தெரியாது, பிரிட்டிஷாரே சரண் என்று தலைப்பாகை யசையப் பொக்கை வாய்ச் சிரிப்புச் செய்ய முடியாது என்பது உண்மையே! ஆனால், ஜப்பானியத் துணி இறக்குமதிக் கட்டுப்பாட்டு விஷயத்தில் தாங்கள் இந்த யாழ்ப்பாணத்தவரின் கௌரவத்தையும் சுய மரியாதையையும் காப்பாற்றி இருப்பீர்கள் நடந்ததைப் பற்றிப் பிரலாபிப்பதில் பயனில்லை. ஆனால் தங்களுக்கு அடியேன் சமர்ப்பிக்க வேண்டியதொன்றுண்டு. சென்ற உபதேர்தலின் போது இருந்த நிலைவேறு: இப்போதுள்ள நிலைவேறு அப்போது திருவாளர்கள் துரைசுவாமி, சந்திரசேகரா, பாலசிங்கம் முதலிய, அனுபவம், ஆற்றல், அரசியலறிவுடைய பழையதலைவர்கள் தேர்தலுக்கு முற்படவில்லை: சிங்கள மக்கள் இரகசியமாக ஓர் அரசியற்றிருத்த மனுவைச் சிருட்டிக்கவில்லை: லண்டன் சாமியிடம் செல்லவில்லை.

இப்போது தமிழர்களது அரசியல் வாழ்க்கையில் ஓர் நெருக்கடியான காலம் ஏற்பட்டு விட்டது. தமிழர்களுடைய நியாயமான கோரிக்கைகளுக்கு இணங்கச் சிங்களத் தலைவர்கள் பின்வாங்குகின்றனர். இதுவே தருணம் என்று பிரித்தாளும் கொள்கையுடையார் தமது மாய வலையை விரிக்கின்றனர். எனவே இந்தச் சந்தர்ப்பத்தில் ஆழ்ந்த அரசியல் ஞானமும், நுண்ணறிவும் இராஜ தந்திரமும் படைத்துள்ளவர்களையே எமது பிரதிநிதிகளாக அரசாங்கசபைக்கு அனுப்புதல் வேண்டுமன்றி, அரசியல் விஷயத்தில் அரிச்சுவடியும் தெரியாதவர்களைப் பரீட்சார்த்தமாக அனுப்ப வொண்ணாது என்பதைத் தாங்களே ஒத்துக் கொள்ளுவீர்கள் தங்களைப்போன்ற வாலிபர்களும் அரசியற் சங்கங்களில் அங்கத்துவம் வகிக்க வேண்டுந்தான்: ஆனால் அதற்குச் சந்தர்ப்பம் இதுவல்லவென்பதைத் தாழ்மையுடன் அடியேன் சமர்ப்பிக்கின்றேன். தாங்களோ நாட்டின் புநருத்தாரண கைங்கரியத்தின் முதற்படியும் மேன்மையானதுமான ஓர் தொழிலில் தற்போது ஈடுபட்டிருக்கின்றீர்கள். எம் நாட்டின் பிற்கால க்ஷேமம் தங்கள் போல்வாரிலேயே தங்கி இருக்கின்றது என்னும் மிகையாகாது. எனவே தாங்கள் இச் சந்தர்ப்பத்தில் தாராள நோக்கங் கொள்ள வேண்டும். அவசரப்பட வொண்ணாது தமிழ் மக்களதும், இலங்கையரதும் க்ஷேமலாபத்தைக் கருத்துட் கொண்டு, இந்நெருக்கடியான சந்தர்ப்பத்தில், எமது நாயிக்கைக்குப் பாத்திரராயுள்ள பழைய தலைவர்களையே அரசாங்க சபைக்கு அனுப்பத் தங்களின் பரிபூரணமான உதவியை அளிப்பீர்கள் என்று காத்திருக்கிறேன். எனதும், என்போல்வாரதும் நம்பிக்கை வீண்போமா?

இங்ஙனம்,

நாட்டின் நிலைமையை

உள்ள உள்ளவாறே காணும்,

"வாலவன்"


# Nethrananda Thailaya.

Ceylon's Premier Curative Medicine Oil.

## நேத்திரானந்த தைலம்.

இலங்கையில் மிகவும் சித்திபெற்ற மருந்து எண்ணெய்களில் இதுவே முதற்றரம். 6 அவுன்ஸ் போத்தல் விலை

ரூ. 2-50, தபாற்கூலி 45 சதம்.

### நற்சாட்சிப் பத்திரங்கள்.

"யாழ்ப்பாணமிருந்து வந்த சப்தம்."

மிஸ்டர். ஜி. கே. மயில்வாகனம், யாழ்ப்பாணம், 4-2-1933ல் எழுதியதாவது:- பெயர்பெற்ற தங்களுடைய நேத்திரானந்த தைலமானது என் சிரசிற்கு எண்ணிறந்த சுகமளித்திருக்கிறது.

"கை கண்ட சுகம்"

மிஸ்டர் எம். துரைராஜா, கலபொட ஸ்டோர், கலபொட, 6-2-23ல் எழுதியதாவது:- நேத்திரானந்த தைலமானது சிரசிலேற்படும் சகல ரோகங்களுக்கும் ஓர் சஞ்சீவி. பூரணசுகமளிக்க இந்த எண்ணெய் மிகப் போதுமானது.

அவரைக் குணமாக்கினது

நேத்திரானந்த எண்ணெய்தான்.

ஸ்ரீமதி எம் டி. அலெக்ஸாண்டர், தாருசுந்த கம்பஹா, 11-3-34ல் எழுதியதாவது:- வெகு காலமாக எனக்கு தலைவலியும், கண்ணெரிவும், இருந்தது. ஆனால் உங்களுடையபுகழ்பெற்ற எண்ணெயை உபயோகிக்கத் துவங்கியது முதல் அவையெல்லாம் முற்றிலும் நீங்கிவிட்டது. ஆகையால தலைவலிக்கும் கண்வியாதிகளுக்கும் இது ஒரு சிறந்த எண்ணெய் என நம்புகிறேன்.

"தீராவியாதிகள் மறைந்தன"

ஸ்ரீமதி ஹரியட் டி. சில்வா, "பிலியன் வில்லா" மூதூர், நேத்திரானந்த தைலத்தால் பெற்ற மனோகரமான அனுபோகத்தைப்பற்றி 1933 மார்ச் 12ல் எழுதுவது:-எனக்குத் தீரா மண்டை இடியும் மங்கலான பார்வையுமிருந்தன. ஆனால் உங்களுடைய குளிர்ச்சிதரும் எண்ணெயை ஒருதரம் உபயோகித்த உடன் குணம் தெரிந்தது. உடனே இன்னுமொரு போத்தல் அனுப்பும்படி கேட்டேன். இது அரிய பலன் அளித்தது.

சளித்தேய்கவளப் போக்கும்

மிஸ் இ. உன்மண்ட், மைதோட்டம், உடப்புசலாவ, 4-3-33ல் எழுதியது:- உங்கள் நேத்திரானந்த தைலம் எனது தலைக்கும் கண்களுக்கும் மிகுந்த நன்மையளித்திருக்கிறது. எனது சிநேகிக்காக ஒரு போத்தல் அனுப்பவும்.

சிரசின் நோய்களுக்குச் சிறந்த அவுஷதம்

காவத்தை எந்தானத்தோட்டத்திலிருக்கும் திரு. பி. எ. ஸி. பெரெயரா அவர்கள் 6-4-34ல் எழுதியதாவது:- "எனது சிரசிலிருந்த நோய்கள் யாவும் தாங்கள் முதலாவதாக அனுப்பின போத்தல் நேத்திரானந்த தைலத்தால குணமாயினவென்பதை மிகவும் சந்தோஷத்துடன் தெரிவிக்கிறேன்." நீங்களும் இன்றே இவ்வித சுகமடையலாம்.

கண் வியாதிகளுக்கு நிகரற்ற மருந்து.

ஆச்சுவேலி போஸ்ட் மாஸ்டர் திரு. எ. என். லாரன்ஸ் 24-8-34ல் எழுதியது:- "உங்கள் நேத்திரானந்த தைலத்தை இரண்டு மூன்று தரம் தடவிய பின் என் கண்நோய்கள் நீங்கிவிட்டன. என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்."

சங்கடப்படுவோருக்குச் சர்வரோக சஞ்சீவி.

திரு. ஆர்- ராஜசுந்தரம், சானிட்டரி இன்ஸ்பெக்டர், வவுனியாவிலிருந்து மார்ச்சு 18ல் எழுதியனுப்புவதயாதெனில:- அதிசயமான உங்களுடைய எண்ணெயின் குணதிசயத்தைப்பற்றி எழுதவேண்டின் எனக்கு வரிக்கமுடியாது. எனக்கிருந்த நரம்பு வலியை நீக்குவதில் இது ஓர் அபூர்வ சஞ்சீவியாகக் காணப்பட்டது.

தலைவலிக்குத் தகுந்த சஞ்சீவி.

திரு. வி. என். நவரத்தினம் அவர்கள் ராஜபெஹில வனுவ, குருநாகலையிலிருந்து இம்மாதம் 29ம் திகதி எழுதியது:- நீண்ட காலமாக எனக்குத் தாங்க முடியாத தலைவலி இருந்தது. நேத்திரானந்த தைலத்தை உபயோகிக்கத் தொடங்கியபின் அது நீங்கி எனக்கு இப்போது நல்ல சுகம்.

"சிரசிலேற்படும் சகல வியாதிகட்கும்

நிகரற்ற சஞ்சீவி

தலவாகொல்லையைச் சேர்ந்த அண்டர்ஸன் தோட்டம், புதுகோட்டியிருக்கும் மிஸ்டர். டி. டி. டி பெரெயரா, அவர்கள் 30-8-33ல் எழுதியதாவது:-உலகமெங்கும் புகழ்பெற்றதான இரண்டுபோத்தல் நேத்திரானந்த எண்ணெய் எனக்கு எண்ணிறந்த சுகமளித்திருக்கிறது. ஆகையால் இன்னுமொரு போத்தல் அனுப்புவீர்களானால் நான் மெத்த நன்றியுடையவனாக இருப்பேன்.

குணமடைந்தவரின் மனமார்ந்த புகழுரை.

பருத்தித்துறை வடக்கு அலவெலியிலிருக்கும் திரு. எம் ஜான் வேலுப்பிள்ளை 30-11-33ல் எழுதுவது:-இது ஓர் அற்புதமான தைலம் எனது பந்து மித்திரர்களுக்கு உங்களுடைய தைலத்தைப்பற்றித் தெரிவித்தேன். அவர்களுக்கும் அதைத் தருவித்துக் கொடுக்கும்படி என்னை அதிக விருப்பத்துடன் கேட்கிறார்கள். ஆகையால் தயவு செய்து ½ டஜன் போத்தல நேத்திரானந்த தைலத்தை வி. பி. பி. மூலம் அனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

சிரசின் ரோகங்களுக்குச் சிறந்த நிவாரணி எது?

திரு கெ. வி. சபாபதி, ஸ்ரீவிலாச, பதுளை, 7-11-33ல் எழுதியதாவது:- "ஒவ்வொரு வீட்டிலுமிருக்கவேண்டியதான தங்களுடைய சிறந்தநேத்திரானந்த தைலத்திற்காக நானுங்களை வாழ்த்துகிறேன். அதன் குணத்தை நானே திட்டமாயறிந்திருக்கிறேன். வி. பி. பி. மூலமாக உடனே 4 போத்தல் அனுப்பி வையுங்கள்.

சிரசில்இருந்த நோய்கள் இருதினங்களில் தீர்ந்தது

"உஷ்ண தேசத்திற்குண்டான அருள்"

ரு. எம். டி. வி. விஷயத்துங்க, C. G. R. பெசலே, மன்னார் 1934 மார்ச்சு மாதம் 17ந் திகதி எழுதியதாவது:- கடந்த ஒரு வருஷமாக என்னைத் துன்புறுத்திய கொடிய மண்டையிடியானது உங்களுடைய நேத்திரானந்த தைலத்தை உபயோகிக்கவே முழுவதும் நீங்கிவிட்டது. உஷ்ணதேசத்தில் இருப்பவர்களுக்கு கிடைத்த ஓர் அருள்என்று இதைச் சொல்லலாம்.

திரு. கெ. ராசையா, போஸ் மாஸ்டர் அவர்கள், பிபில, 14-11-33ல் எழுதியதாவது:-நான்கு மாதங்களாகப் பெருந் தடிமல் பிடித்து அதிகம் சங்கடப்பட்டேன். எனது சிநேகிதரில் ஒருவர் தங்களது நேத்திரானந்த தைலத்தில் கொஞ்சம் எனது சிரசில் போடும்படி கொடுத்தார். தேய்த்து இரண்டோடாகவே எண்ணெயின் வலிமையால் எனது தடிமல் மாயமாக மறைந்தது.

யாவரும் அதை உபயோகிக்குந்தருணத்தில்

நீங்களும் அதை உபயோகிக்கக் கூடாதா?

மிஸ்டர் டி. எ. சாமுவேல், ரூப்காமா, இங்கிரியா 26-8-33ல் எழுதியதாவது:- நீண்டகாலமாக தங்களுடைய எண்ணெயை நான் உபயோகித்து வந்ததில் அது சிரசிற்சேற்படும் சகல வியாதிகளுக்கும் ஓர் சஞ்சீவி என்று கண்டு, இன்னும் அதைத் தொடர்ந்து உபயோகிக்கவேண்டுமென விரும்புகிறேன்.

ஸ்ரீமதி எ. கனகசபை, வல்வெட்டித்துறை, 25-2-33ல் எழுதுவது:-உங்களுடைய உலகப் பிரசித்திபெற்ற நேத்திரானந்த தைலத்தை நான் வெகுகாலம் உபயோகித்திருக்கிறேன். இது மிகவும் நல்லதென அறிந்தேன். தயவுசெய்து இன்னொரு போத்தல் அனுப்பவும்.

### இந்திய தோட்ட முதலாளி மனமுவந்து கூறுவதைக் கவனியுங்கள்.

இலங்கையில் அநேக தோட்டங்களில் சொந்தக்காரரான ஓர் இந்திய கனவான் தாமாகவே புகழ்ந்து கொடுக்கும் நற்சாக்ஷியைக் கவனியுங்கள். நேத்திரானந்த தைலத்தின் பயனில அவருக்குள்ள நம்பிக்கையை நாவினால் செப்பத்தரமன்று எனக் கூறினர்.

அன்பார்ந்த முதலியாரவர்கட்கு,

உண்மையில் உங்களது உலகப்பிரசித்திபெற்ற நேத்திரானந்த தைலத்திற்கு நற்சாட்சியளித்திருக்கும் பெரிய மனிதர்கட்கெல்லாம் நான் நன்றியறிதலுள்ளவனாயிருக்கிறேன்.

தங்களது தைலத்தை உபயோகித்ததால் நான் அடைந்த அளவற்ற நன்மைகளை நாவினால்சொல்லமுடியாது. மயக்கம், தலைச்சுற்றல், மயிர் உதிர்தல், கண்ணில் நீர் வடிதல், தலைவலி போன்ற பலவித வியாதிகளும் இத்தைலத்தால் நீங்கிவிட்டன.

என்னுடைய உயிர் உள்ள அளவும் உங்களது உலகப்பிரசித்திபெற்ற நேத்திரானந்த தைலத்தை உபயோகிப்பதை நிறுத்தமாட்டேன். இதுடன் எனது நண்பர்களுக்கும் சுற்றத்தார்களுக்கும் இதையே சிபார்சு செய்கிறேன்.

ஜனங்களின் வியாதிகளைத் தீர்ப்பதில் தங்களுக்கு வெற்றியுண்டாக வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்.

நாகர் கோயில்,
தென் இந்தியா,
19-5-1931

தங்கள் உண்மையுள்ள,
ஜாபீஸ் ஜாகோப்.

## பாய்சாஜ்ய குணதார்சனய.

டப்ளியு. டானியல் பெர்னாண்டோ வைத்தியசேகர வேதமுதலியார்,

"ஸ்ரீவேத வளவுவ", பாணந்துறை, இலங்கை.

Q 94. 4-7-35. to 3-10-35.

## புகையிலைக்குப் பசளையிடுவது

சரியான முறையில் பசளை யிடுவதினால் மாத்திரமே ஏராளமான பயிரையும் திறமான சாதி இலையையும் பெற்றுக்கொள்ளலாம்.

கொளும்பு கொம்மேர்சல் கம்பனியாரின் புகையிலைப் பசளைக் கலவையைச் சரியான முறையாகப் பாவித்தால் விசேஷ லாபகரமான ஆதாயத்தைக் கொடுக்கும்.

முழு விபரங்களும் இன்னும் வேண்டிய புத்திமதிகளை இலவசமாக அறிந்துகொள்வதற்கும், கொழும்பு கொம்மேர்சல் கம்பனி லிமிற்றெற், கொழும்பு என்றவிலாசத்துக்கு எழுதவும்.

(H. 50. 13-5 to 12-11 35.) ©

## திருநெல்வேலி ஒற்றுமை நிதி,

(வரைவுளது)

அதிகாரம் பெற்ற மூலதனம் ரூபா **500,000.**

ஒரு பங்கு **25** சதமாக **80** மாதங்கள் செலுத்தி ரூபா **25**ம் ஆதாயமும் பெறலாம்.

தனிகத்தொழிலும் உணவுப்பொருள் வியாபாரமும்
திருநெல்வேலியில் இலாபகரமாய் நடக்கின்றன
வேண்டிய இடங்களில் கிளை ஸ்தாபனங்கள் திறக்கப்பெறும்.
தேசிய கருமங்களை வளர்ப்பதால் சுயேச்சைபெற முடியும். ஆகலால்,
முதலை வளர்த்து வேலை யளித்து, கைத்தொழிலை உயிர்ப்பிக்கும்
நோக்கங்கொண்ட இந்நிதியை ஆதரியுங்கள்!
இலகுவான முறையில் இறக்கூடிய கடன்கள் கொடுக்கிறோம்.
உயர்ந்த வட்டி விகிதங்களோடு தவணைக்கும்
நிபந்தமாயும், சம்பாத்தியத்திலும், கடைக்கணக்கிலும் பணம் ஏற்றுக்கொள்ளோம்.
பங்குகளுக்கு முந்துங்கள்!!
கைராட்டினத்தில் நூற்ற நூலும், கைத்தொழில் பொருளும்
சந்தாவுக்கு ஏற்றுக்கொள்ளுவோம்.

வ. சோமசுந்தரம்,
காரியாதிகாரி.

(Y. 137. 1-11-34 to 31-10 35.) ©

## ஏழு தலைமுறையாய் அனுபவமுள்ள மருந்துகள்.

சமஸ்தான வைத்திய நிபுணரான சி. எம். சாமி அவர்களின் மருந்துகள் உலகமெங்கும் புகழ்பெற்றவை உண்மையான குணமுள்ளவை. உள்ளூர், வெளியூர் வாசிகளால் நன்கு மதிக்கப் பெற்றவை.

இந்தியாவில் பெரிய புகழ் பெற்றது




பெரிய நற்சாட்சி சேட்லாக் இனும்.

நீங்கள், என்றமழியாத இளமைப்பருவத்தை அடையவேண்டுமானால் மகாவீரிய தங்கபஸ்பம் சாப்பிடுங்கள். கடுப்பு, பவுத்திரம், மூலம், சீதபேதி, க்ஷயம், இருமல் குன்மம், சூலை முதலிய சகல கொடிய வியாதிகளும் நீக்கும். அழிந்துபோன ஆண்மையையும், இழந்த பலத்தையும், இல்லறவாழ்வில் இன்பத்தையும் கொடுத்து, ஊக்கத்தையும் உற்சாகத்தையும் தந்து தளர்ந்த நரம்புகளைச் செட்டிப்படுத்தி, வயோதிகரை வாலிபராக்கி சதா பரமானந்தத்தைக் கொடுக்கக்கூடிய அபூர்வ சக்தி இதற்கிருப்பதால் இதன் அரிய குணத்தைக்கண்டு ஆச்சரியப்படாதவர்கள் ஒருவருமில்லை. ஒருமுறை உபயோகித்தால் உண்மை விளங்கும். 2½தோலா பஸ்பம் விலை ரூ. 10.

நாகபஸ்பம். (மூலவியாதிக்கு) மூலம் ஒன்பதும் அதிசீக்கிரம் குணமாகும். உதிரவாதமுள்ள சிறந்த ஒளஷதம். ஆப்ரேஷன் செய்யவேண்டிய அவசியமில்லை. முளை தானே கரையும். சீழ் மூலம், இரத்தமூலம், குத்தல், மூல முளை, மலபந்தம், முதலியவை குணமாகும். புட்டி 1க்கு விலை ரூபா 4—0—0.

தாளகபஸ்பம். (இருமலுக்கு) காசம், க்ஷயம், சளி, இளைப்பு, இருமல், கஷ்டசுவாசம், கோழை, கபக்கட்டு இவைகள் எவ்வளவு நாட்பட்டதாயினும் சரி. எட்டுவித காசமும் தீரும். 24வேளை புட்டி 1க்கு விலை ரூபா 4.

அப்ரேக் செந்தூரம். (நீரழிவுக்கு) ஜாக்கிரதையாய் நீரையும், நீரிறன்ன சர்க்கரைச் சத்தையும், குறைத்து தாகத்தை நிறுத்தி தேக வெளுப்பை மாற்றி இரத்த விருத்தியையும் தேக புஷ்டியையும் தரும். சகல மேகமும் நீக்கும். புட்டி 1க்கு விலை ரூபா 15. தபால் சார்ஜ் வேறு.

குறிப்பு:—ஏராளமான நற்சாட்சிகளை விபரமான கியாட்லாக்கில்பார்க்கவும் பினங்கு, சிங்கப்பூர், மோரிஸ், நெட்டால், தென் ஆபிரிக்கா முதலிய பிறதேசவாசிகள் முன்பணம் அனுப்பவேண்டும். வி. பி. சிஷ்டமுள்ள பிறதேசவாசிகள் ரூபா 5—0—0 அட்வான்சுடன் ஆர்டர் அனுப்பவேண்டும்.

(Q. 49. 9-5 to 8-8-35.) மலையப்பசாமி வைத்தியசாலை, பழனி.

### திருநெல்வேலி ஒற்றுமை நிதி
(வரைவுளது)

இச்சமும் யுவ ௵ ஆனி ௴ 29௳ (13-7-35) சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு திருநெல்வேலி சைவ வித்தியாசாலை மண்டபத்தில், பங்காளர் பொதுசபை சமுகந்தரும். அத்தருணம் இரண்டாம் வருடாந்த அறிக்கையை ஏற்று ஆதாயப்பகுதி வெளியிடுவது முதலிய விஷயங்கள் ஆலோசனை.

வ. சோமசுந்தரம்
காரியகருத்தா.

திருநெல்வேலி,
26-6-1935
(Mis 92. 4 & 11-7-35)

## விளம்பரம்.

நா. கர்ணையா
வெந்தீஸ் பேஸ்தரும்
கோட் டுவிற்பனவு
கொம்மிஷனரும்.

கொட்டடி.
யாழ்ப்பாணம்.

(M 3-6to 31-12-55.) ©

## சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்துவதால் அவர்கள் மனமகிழ்ந்து செர்டிபிகேட்களையும் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலக நன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப் பற்றிப் பிரசுரிதது வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பிதாறு, சாலாமுஸ்லி, சப்பேமுசலி, பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளிவிதை, நாகப்பூ, வங்கபஸ்பம், அரகபஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம், சாமபிராணிபதங்கம் இன்னும், அநேக புஷ்டியான மூலிகை வகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது.

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்திற்குள் உண்டாயிருக்கும் பக்கவாயு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாயு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்தலேகியத்தைச் சாப்பிட்டு வந்தால், மேற்சொல்லிய வியாதிகள் குணமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள் பால் விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை றாத்தல் ஒன்றுக்கு ரூபா உ0. அரை றாத்தலுக்கு ரூபா பத்து. கால் றாத்தலுக்கு ரூபா ரு. தபால் செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினங்கு முதலிய தொடுவா பிராச்சியப் பகுதிக்கு வி. பி. சட்டம் இல்லாததனால் முன் மணிஆடர் அனுப்புதல் வேண்டும். இங்ஙனம்,

க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கிய சுகாதார வைத்தியசாலை.
காத்தான்குடி போஸ்டு,
மட்டக்களப்பு.

(Y. 55 1-1-34 to 31-12-35) இலோன்

## பவுண்மார்க் ஓடுகள்.

| | |
|---|---|
| மலிவு நிறைந்த | பொலிவு நிறைந்த |
| அழகு மிக்க | புகழ்வு மிக்க |
| ஓசை கொண்ட | உயர்வு கண்ட |
| கனங் குறைந்த | காய்வு தந்த |
| கசிவில்லாத | சூடு கொள்ளாத |
| பவுண்மார்க் | ஓடுகள் இவைகளே. |

இவை எம்மிடமன்றி வேறெவரிடத்தும் கிடைக்காதன வென்பதை மறவாதீர்.

தனிவசண்டு: **சி. வீரகத்திப்பிள்ளை** அண்டு சன்ஸ்
யாழ்ப்பாணம், பருத்தித்துறை,
வல்வெட்டித்துறை, காங்கேயன்துறை.

சடவசண்டுகள்: ஆறுமுகம்பிள்ளை, காரைநகர்.
பி. ம. தம்பையா, ஊர்காவற்றுறை.

**N. B.** மேற்குறித்த இடங்களில் மேற்குறித்த ஆட்களிடமே பெறலாம்.

மற்றெவரிடத்தும் இந்தஓடுகள் இல்லை.

**Phonoe No 93.**

(Y. 57 1-5-35to30-4-36.)

## வாலிபம் வேண்டுமா?

அப்படியெனில்
இம்மருந்தைக்
கொள்மின்!



வயோதிகத்திலும் பார்க்கக் கடனே உமது முகத்தைத் திரைக்கப்பண்ணிக் கிழவனுக்குகின்றது. கடினவேலையிலும் பார்க்க, பணவிஷயமான துன்பங்களே தீவிரத்தில் உமது வாலிபத்தைப் போக்குகின்றது. தேகசுகமும் மனச்சாந்தியும் நீர் பெறவேண்டுமானால், சேமநிதியிற் பணத்தைப் போடுதலால் எமக்குப் பாதுகாப்புண்டு என்ற உணர்ச்சி வரவேண்டும். அதுவே உமக்குப் பெருந்துன்ப நிவாரணமாம்.

ஆவசியக சந்தர்ப்பத்திற்கும், வருவாய் குறைந்த, அல்லது நின்றகாலத்திலும் தயாரயிருப்பது நீங்கள் எண்ணுகிறபடி கஷ்டமல்ல, உங்கள் செலவோடு செலவாய் எம்மிடம் பணத்தைச் சேமியுங்கள். நாங்கள் உதவிசெய்கிறோம்.

கோய்லன்வங்கி லிமிற்றெட்,
யாழ்ப்பாணம்.

Y. 71 23-5 to. 22-5-36

கோடைகாலத்திற் பிடிக்கும்
தலைவலியைத் தடுப்பதற்காக
ஒருபோத்தல்

## லிட்டில்ஸ் ஓரியெண்டல் பாம்

## தைலத்தை

வாங்கி வைத்திருங்கள்.

இந்தியாவில் சிறந்ததும் முதன்மையானதும்

Y. 53 1-1 —31-12-35

வியாபாரத்திற்கழகு

## விளம்பரஞ் செய்தல்.

அதற்குகந்தது இந்துசாதனமே.

வான்முகில்வழாதுபெய்க மலிவளஞ்சுரக்கமன்னன், கோன்முறையரசுசெய்க குறைவிலாதுயிர்கள்வாழ்க,
நான்மறையறங்களோங்க நற்றவம்வேள்விமல்க, மேன்மைகொள்சைவநீதி விளங்குகவுலகமெல்லாம்.

Printed and Published by S. ADCHALINGAM, residing at Vannarponnai West Jaffna, for and on the behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai Jaffna at their Press, Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna. on Thursday the 10th July 1935.